விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 6

"சுதந்திரன்"
(தினம் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்
"சுதந்திரன்,"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone, 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஆண்டு கார்த்திகை மீ 13உ வெள்ளிக்கிழமை — Colombo, November, 28, 1947 — ஹிஜிரி 1367 முஹர்ரம் பிறை 14 | இதழ் 178

மக்களை அடக்குவது மந்திரி சபையின் கொள்கையா?

சிறுபான்மைத் தமிழரை ஒடுக்க சேனநாயக்கா செய்த சதி?

வர்த்தக மந்திரி சுந்தரலிங்கம் வாயடக்கப்பட்டார்:

மக்கள் விரும்பும் ஆட்சியை ஏற்படுத்தவேண்டும்!

காங்கேசன்துறைப் பிரதிநிதியின் ஆணித்தரமான பேச்சு!

காங்கேசன்துறைப் பிரதிநிதி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கே.ஸி., நேற்று பிரதிநிதிகள் சபையில் கவர்னர் பேச்சில் எதிர்க் கட்சிகளின் திருத்தப் பிரேரணையைக் கொண்டுவந்தபோது இலங்கை வர்த்தக மந்திரியும், மாஜி கணிதப் பேராசிரியருமாகிய திரு. ஸி. சுந்தரலிங்கத்தின் சென்ற இரவுப் பேச்சில் உள்ள கணக்குப் பிழையை எடுத்துக்காட்டி அன்னாரின் வாயை அடைத்தார்.

"மூன்னூறுபேர் ஆள் மாறாட்டஞ் செய்து வாக்களிப்பதற்கு வவுனியாவிற்குச் சென்று திரு. சுந்தரலிங்கம் கூறுமாப்போல் ஆங்குள்ள இருபது தேர்தல் நிலையங்களிலும் வாக்களித்திருந்தால் வவுனியாத் தேர்தல் முடிவு வித்தியாசமாக இருந்திருக்கும்;" என்று கன்னத்தில் அறைந்தாற்போன்று வர்த்தக மந்திரியின் [அர்த்தமற்ற புகார்களுக்கு காங்கேசன்துறைப் பிரதிநிதி பதிலளித்தார்.

பொதுஜனப் பாதுகாப்புச் சட்டத்தையிட்டு பேசியபோது திரு. செல்வநாயகம், "நான் பள்ளிக்கூட மாணவனாக இருந்த காலத்தில் பிரதம மந்திரி திரு. சேனநாயக்கா சிறையிலிடப்பட்டார். அந்தக் காலத்தில் நாம் அவருக்காகத் துக்கப்பட்டோம். ஆனால் இன்று அவர் தமக்கு எதிர்க்கட்சியான மக்களை அடக்குவதற்கு அதே ஆயுதத்தை உபயோகிப்பது எமக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கின்றது" என்று கூறினார்.

கொழும்பு, நவ. 28

பாராளுமன்றக் கூட்டம் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் திரு. ஏ. எப் மொலமுரே தலைமையில் ஆரம்பமாயது.

நிதி மந்திரி 1947-48 வருட வரவு செலவுத் திட்ட நகல் ஒன்றை சபையில் சமர்ப்பித்தார். கூட்ட நிகழ்ச்சியில் உள்ள முதல் விஷயமாகிய சங்குச் சட்டம் பற்றிய தீர்மானத்தை திரு. ஆர். எஸ். எஸ். குணவர்தனா பிரரேபித்தார். இத் தீர்மானம் நிறைவேறியது.

ஸ்தல ஸ்தாபன சுகாதார மந்திரி திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயகா வீட்டமைப்புத் திட்டம்-நகர அபிவிருத்தி சம்பந்தமான ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அத் தீர்மானத்தில் ஜனுவரி 1-ம் தேதி (1947-ம் வருடம்) முதல் வீடமைப்பு-நகர அபிவிருத்தி திட்டத்தின்படி குறிப்பிட்டுள்ள பகுதிகளில் இது சம்பந்தமான கூட்டம் அமுலில் இருக்குமென்று கூறப்பட்டுள்ளது. இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத் தீர்மானத்தின் பின் திரு. பண்டார நாயகா வீடமைப்பு-நகர அபிவிருத்தி சம்பந்தமாக கொண்டு வந்த பிறிதொரு தீர்மானமும் சபையில் நிறைவேறியது. இதன் பின் சபையின் முக்கிய நடவடிக்கைகள் அடுத்த வாரம் எடுக்கப்பட இருப்பதாகவும் இப்பொழுது விவாதத்தில் உள்ள விஷயம் இன்று முடியுமென தாம் நம்புவதாகவும் சபையில் திரு. பண்டாரநாயகா தெரிவித்தார். இதன் பின் கவர்னரது பிரசங்கத்தின் மீது நடைபெற்ற விவாதம் தொடர்ந்து ஆரம்பித்தது.

நீதி இலாகா மந்திரியின் பாராளுமன்ற காரியதரிசி திரு. ஜியார்ஜ் ஆர். டி. சில்வா பேசுகையில் காணிகளைத் தேசிய மயமாக்குவது பற்றியும் இப்பொழுது படிப்படியாக இங்கு காணிகள் தேசிய மயமாக்கப்பட்டு வருவதாகவும், இலங்கை சுமார் 75 சத விகிதம் உணவுப் பொருள்களை வெளிநாட்டிலிருந்துதான் இறக்குமதி செய்கிறதென்றும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதே அரசாங்கத்தின் நோக்கமென்றும் இப்பொழுது தொழிலாளருக்கு அளிக்கப்பட்டு வரும் சம்பளம் அவர்களது வாழ்க்கைச் செலவுக்குப் போதியதன் றெனினும் இத்துறையில் அரசாங்கம் இப்பொழுது எவ்வித நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ள முடியாதிருக்கிறதென்றும்படிப் படியாகவே மாற்றங்கள் செய்யப்படுமென்றும் கூறினார்.

முதல் விசாரணை

அடுத்தபடியாக டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா பேசுகையில் கூறியதாவது:-

'எதிர்க் கட்சியினர் மீது இப்பொழுது குற்றம் சாட்டியுள்ள அரசாங்க தரப்பினர் இத் தேச மக்களால் அவர்கள் முன் செய்த செயல்களுக்காக முதன் முதலில் விசாரணை செய்யப்படப் போகிறார்கள். இந் நடவடிக்கை விரைவில் நடக்கும். சர்வதேச நோக்குள்ள ஒரு கட்சியையே நான் சந்தித்திருக்கிறேன். இதனால் நான் பெருமையடைகிறேன்.'

இவர் தொடர்ந்து பேசுகையில் இலங்கை சுதந்திரம் பற்றியும் அதனைப் பெறுவதற்கு பாடுபட்டோராக பெருமையடையும் இவருடன் புரட்சி செய்தவர்களும் சமீபத்தில் தொழிலாளர் இயக்க நடவடிக்கையில் இறந்தவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டுவிட்டு மேலும் பேசியதாவது:-

'சோஷலிஸம் என்பதன் கருத்தை உண்மையில் உள்ளபடி அறிந்து இருந்தால்தான் இத்துறையில் நன்கு பிரகாசிக்கமுடியும். விஷயத்தை சரியாக அறிந்திராத ஒரு எழுத்தாளரது புத்தகத்தை மட்டும் சும்மா வாசித்துவிட்டு 'சோஷலிஸத்தைப் பற்றி எனக்குத் தெரியும்' என்றுகூறுவது நிலவு வெளிச்சம் போன்றதுதான்.

பிரதமருக்கு ஆறுதல் கிடையாது

கமியூனிஸத்தை வேருடன் களைந்தெறியும் வரை போராடப் போவதாக பிரதம மந்திரி கூறியுள்ளார். அவ்விதம் அவர் தமது முயற்சியில் இறங்கினால் பிரதமருக்கு ஒரு காலத்திலும் ஓய்வே கிடைக்கமாட்டாதென்பதை நான் உறுதியாகக் கூற விரும்புகிறேன்.

இப்பொழுதுள்ள அரசாங்கம் தனது நடத்தையால் அதனைப் பற்றி மதித்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தை எங்களுக்குக் கொடுத்துள்ளது. தேர்தலுக்கு முன்னும் தேர்தலுக்குப் பின்னும் இப்பொழுதுள்ள அரசாங்கத்தினரின் நடத்தைகள் எல்லா விஷயங்களையும் அம்பலப் படுத்தியுள்ளன.

அரசாங்க கட்சி தேர்தலுக்கு முன் பொது மக்களுக்கு பல விதமாகவும் உறுதிகளை அளித்துள்ளது. எதிர் கட்சியினருக்கு வாக்களித்தால் தேசத்தின் மதங்களும் பழைய பழக்க வழக்கங்களும் அழிந்து விடுமென்று அரசாங்க கட்சியினர் பிரச்சாரம் செய்துள்ளனர். பழைய நடவடிக்கைகளின்படி இப்பொழுதைய அரசாங்கத்தைப் பற்றி மதிப்பிடுவதானால் இப்பொழுது அவர்கள் வீழ்ச்சியடைகிறார்கள் என்பது தெரியவரும். தேர்தலுக்கு முன் அபேட்சகர்களிடமிருந்து பொது மக்கள் பல கோரிக்கைகளையும் கேட்டுள்ளனர். தேசத்தில் லஞ்சமும் ஊழல்களும் ஒழிக்கப்படவேண்டுமென்று அவர்கள் கேட்டுள்ளனர். பிரதம மந்திரியும் இதற்கு உறுதியளித்துள்ளார். பெரு மதத்துடன் அவர் அரசாங்க இலாக்காக்களை அதிகரித்துள்ளார். வேறும் பல வேலைகளைச் செய்வதாக உறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால் நடந்துள்ளவையெல்லாம் வேறு விதம்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நடத்தும் சக்திபற்றி கேட்போர் அரசாங்கத்தின் தனிப்பட்ட அங்கத்தினர்பற்றி நம்பிக்கைகொள்ளாது புதிய அரசாங்கம் எந்த அரசியல் போக்கில் அமைக்கப்பட்டுள்ளதென்பதை அறியவே முயற்சிக்கின்றனர். யுத்த காலத்தில் செயற்கை முறையாலேற்பட்ட செழுமை நிலையானதல்ல. யுத்த காலத்தில் இலங்கைத் தேசத்தின் உற்பத்தி சக்தி அபிவிருத்தி செய்யப்படவில்லை.

அடுத்த தேர்தல்

சுயேச்சை அங்கத்தினர் சிலர் அரசாங்க கட்சியுடன் சேர்ந்துள்ளனர். அடுத்த பொதுத் தேர்தல் நடப்பதற்கு அதிக காலம் தேவையில்லை. விரைவில் அடுத்த தேர்தல் வந்துவிடும்.

இவர் தொடர்ந்து பேசுகையில் பொது மக்களுக்காக பேசுபவர்கள் எதிர்க் கட்சியினரே யென்றும், செய்கைமூலம்எந்த விஷயத்தையும் காட்டுவதையே எதிர்க்கட்சியினர் கருதுகின்றனரென்றும் தொழிலாளர் கட்சித்தலைவரெனக் கூறிக்கொள்ளுபவர் யூ. என். பி. யில் சேர்ந்துவிட்டாரென்றும் அவர் தாம் இருந்ததுபோல் தொடர்ந்து இருந்திருப்பின் எல்லோராலும் பாராட்டப்பட்டிருப்பர் என்றும் இப்பொழுதுள்ள ஆட்சி பாஸிஸ ஆட்சியாக இல்லாதுவிட்டாலும் பாஸிஸ ஆட்சிக்கு விதை விதைக்கிறதென்றும் உலகம் முழுமையுமுள்ள புரட்சி இயக்கங்கள் பாடுபட்டு உழைக்கும் பொது மக்களுக்கு ஆதரவளிக்க ஏகாதிபத்தியங்களை ஒழித்துக் கட்டும் வேலையில் இறங்கியுள்ளனவென்றும் கூறினார்.

திரு ஏ. ஈ. குணசிங்கா பேசுகையில் தமக்கு ஒருவரும் ஆலோசனைகள் கூறவேண்டியதில்லையென்றும் தேசத்தின் வழமை-பழக்க வழக்கங்கள் முதலியவற்றிற்கு குந்தகம் விளக்காத முறையில் தாம் எப்பொழுதும் போராடி வந்துள்ளாரென்றும் பொது மக்களை சிலர் பிழையான வழிகளில் நடத்திச்செல்வதாகவும் வெள்ளவத்தை-கல்கிசை தொகுதி அங்கத்தவரதும் ஹுவான்வீலை அங்கத்தவரதும் பிரசங்கங்களைக் கேட்டு ஆத்திரமூட்டப்பட்ட ஜனக்கூட்டத்தால் ஒரு போலிஸ் சார்ஜண்ட் ஒரு முறை கொல்லப்பட்டதாகவும் கூறினார்.

பெரும் பொய்

இச்சமயத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா இடையிட்டு திரு குணசிங்காவின்குற்றச்சாட்டை மறுத்துப் பேசினார். அவர் கூறியதாவது:-

'தொழிலாளர் ஊர்வலம் நடந்த தினத்தில் போலிஸ் சார்ஜண்ட் கொல்லப்பட்டார். அந்த நாட்களில் நான் இந்தியாவிலிருந்திருக்கிறேன். என் மீது அனுவசியமான பொய்களைச் சுமத்தாது எது விஷயத்தையும் பேசுமுன் அவை உண்மைதானா என்பதை நன்கு ஆராய்ந்து பார்த்து பேசும்படி திரு குணசிங்காவுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.'

திரு குணசிங்கா தொடர்ந்து பேசுகையில் தேசத்திலுள்ள தொழிலாளர் முன்னேற்றத்துக்கு தாம் ஆற்றியவை பற்றி கூறிவிட்டு இட்டமுறைப்படி பாராளுமன்ற நடவடிக்கைகளை எடுத்து தொழிலாளர் குறைகள் தீர்க்கப்படுவதில் தமக்கு நம்பிக்கை உண்டென்றும் இத்தேசத்தில் கமியூனிஸம் வருமுன் தொழிலாளர் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட முடிந்ததென்றும் பொது மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதில் சமாதானமான நடவடிக்கைகளிலே அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், வேலை நிறுத்தத்தின்போது தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் திரும்பவும் வேலைக்கு எடுக்கப்பட்டதால் இப்பொழுது அவர்கள் ஹுவான்வீலை தொகுதிஅங்கத்தவர் தலைமையில் ஊர்வலம் செல்ல ஒழுங்குகள் செய்துவருகின்றனரென்றும் கமியூனிஸ்ட் ஏஜண்டுகளாலும் மற்றும் இடதுசாரிக் கட்சியினராலும் தொழிலாளர் மோசம் செய்யப்படுகின்றனரென்றும் தேசத்தில் அமைதியின்மையையும்குழப்பத்தையும் தடுமாற்றத்தையும்ஏற்படுத்த வேலை நிறுத்தத்தைக் கொண்டுவர அவர்கள் முயற்சிக்கின்றனர் என்றும் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் வங்கி குமாஸ்தாக்களுக்கு தாம் அறிவுறுத்தியபோது வேலைநிறுத்தம் கடைசி ஆயுதமாகவே உபயோகிக்கப்படவேண்டுமென்று கூறிவந்துள்ளதாகவும் ஆனால் இங்குள்ள இடதுசாரிகள் வேலைநிறுத்தத்தை எடுத்தவுடனேயே உபயோகிப்பதாகவும் கூறினார்.

இச்சமயத்தில் சபாநாயகர் விவாதம் நடக்கும் தீர்மானத்தை ஒட்டிப் பேசும்படி அங்கத்தவருக்குக் கூறினார். அதன்படி இவ் விவாதத்தில் கலந்துகொள்ளும் அங்கத்தினர்கள் சுருக்கமாகப் பேசும்படியும் விவாதம் நடக்கும் ஒழுங்குகள் சரியில்லையென்றும் கூறினார். மேலும் இன்று (வெள்ளிக்கிழமை) சபை காலை 10 மணிக்கு கூடுமென்றும் மத்தியானம் 12 மணிக்குஒத்திவைக்கப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் ஆரம்பிக்கப்படுமென்றும் மாலை 5 மணிக்கு சபை பின் ஒத்திவைக்கப்படுமென்றும் கூறினார் இத்துடன் சபை நடவடிக்கை மாலை 4 மணிக்கு தேனீர் இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்டது.

தேனீர் இடைவேளைக்குப் பின் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் கவர்னர் பிரசங்கத்தின் மீது திருத்தப் பிரேரணை கொண்டுவந்தபோது பேசுகையில் கூறியதாவது:-

'தேசத்தை எவ்விதம் ஆட்சி செய்வது என்பதுபற்றி பிரதம மந்திரி எவ்வித கருத்துக்களையும் வெளியிடாதபோதிலும் தேசம் எவ்விதம் ஆட்சி செய்யப்படப் போகிறதென்பதை அறியவே நான் பராளுமன்றத்துக்கு வந்துள்ளேன். அரசாங்கம் ஒன்றின் பிரதிநிதியாக இருக்கிறது. எதிர்க்கட்சி ஒன்றின் பிரதிநிதியாக இருக்கிறது அரசாங்கத்தின் கொடுங்கோலாட்சியிலிருந்து பொது மக்களைக் காப்பாற்றவே எதிர்க் கட்சி இருக்கிறது.

பிரதம மந்திரியின் கட்சியில் சேர்ந்த வவுனியா தொகுதி அங்கத்தவர் மூன்று முறை அத்தொகுதியில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியுடன் போட்டியிட்டுள்ளார். இருமுறை அவர் தோற்கடிக்கப்பட்டார். மூன்றாவது தடவைதான் அவர் வெற்றிபெற்றார். அவர் அடைந்த வெற்றியைப்பற்றி தம்பட்டமடித்தாரேயொழிய தோல்வியைப்பற்றி ஒன்றும் பேசவில்லை.

யூ. என். பி தேர்தல் விஷயங்களில் கையாண்ட முறைகள் பல. பிரதம மந்திரி தேர்ந்தெடுத்து தமிழ்க் காங்கிரஸ் தலைவருடன் போட்டியிட அனுப்பிய அபேட்சகர் படுதோல்வியடைந்தார். யாழ்ப்பாணத் தேர்தலுக்கென குறிப்பிட்டிருந்த தினம் பின் மாற்றப்பட்டது. இப்பொழுது யாழ்ப்பாணத் தொகுதி அங்கத்தவராக இருப்பவர் வவுனியா தொகுதியில் இரு முறை தமது கட்சிக்காக வேலைசெய்து வெற்றியடைந்துள்ளார், இப்பொழுதுள்ள அங்கத்தவர்தான் இரு முறையும்தோல்வியடைந்தவராகும். வவுனியாதொகுதி தேர்தல் தேதி பின்போடப்பட்டு இருப்பின் வர்த்தக மந்திரியாக இன்று இருப்பவர் வேறாகதை சொல்லவேண்டியிருந்திருக்கும்.

இடைக்கால அரசாங்கம் அமைக்கவேண்டுமென தமிழ்க் காங்கிரஸ் விரும்பியது அதில் மந்திரி பதவிகளைப் பெற விரும்பியே என வர்த்தக மந்திரி கூறியதை நான் வெகுவாக ஆட்சேபிக்கிறேன்.

இன்று தேசத்திலே முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய பிரச்னைகள் பல இருக்கின்றன. அவற்றைஉடன்கவனித்துநடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

பிரிட்டிஷார் இலங்கைக்கு வருவதற்கு முன் இலங்கையில் இரண்டு அரசாங்கங்கள் இருந்தன. ஒன்று தமிழர் அரசாங்கம்; மற்றது சிங்களவர் அரசாங்கம். இது சரித்திர உண்மையாகும் சென்ற 1921-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட ஜன சங்கியையின்படி வட கீழ் மாகாணங்களிலுள்ள தமிழர்கள் இலங்கை ஜனத்தொகையில் 22 விகிதமாவர். ஆயின் சென்ற ஆண்டில் எடுக்கப்பட்ட ஜனத் தொகையின்படி இப்பகுதித் தமிழர் 11 விகிதமாவர். இவ்விதம் வருவதற்குக் காரணமென்ன? சபையிலிருந்து ஒரு பிரதிநிதி அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கக்கூடும் என்று கூறினார்.

திரு செல்வநாயகம்:- 'இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் இவர்களில் ஒரு விதத்தினர்தானாகும்' என்றார்.

தொடர்ந்து திரு செல்வநாயகம் சொல்லியதாவது:- 'இந்நாட்டில் சிறுபான்மையினரை அடக்குவதற்கும் மக்களின் விருப்பத்திற்கும எதிர்மாறாக கருமங்கள் ஆற்றுவதற்கும் பிரதம மந்திரி முற்பட்டிருக்கிறார். கொழும்பிலுள்ள 60,000 தமிழ் மக்களில் ஒருவரை தமிழ் மக்களின் பிரதிநிதியாகச் செய்வதற்கும் திரு சேனநாயக்கா சென்ற பொதுத் தேர்தலில் முயன்றார்; அது பலிக்கவில்லை.

இலங்கையின் தென் பாகங்களை எடுத்துக்கொள்ளுவோம். ஆங்குள்ள மக்கள் கமியூனிஸ்டுகளாகிறார்கள் என்று திரு சேனநாயக்கா கவலைப்படுகிறார். மக்கள் தம் விருப்பப்படி நடந்துகொள்ளுவதுதான் முறையாகும்.

இதே போன்று இலங்கைத் தமிழர் தனி யாட்சி நாடும் கூட்டரசாங்கமும் ஏற்படுத்த விரும்பினால் அவர்கள் விருப்பத்தின்படி நடக்க விடுவதுதான் உசிதமாகும். இதில் ஏன் வர்த்தக மந்திரி கவலைப்பட வேண்டும். சென்ற தேர்த

[4-ம் பக்கம் பார்க்க]

தமிழ் கலைக் களஞ்சியம்

திருப்பதிதேவஸ்தானம் ரூ. 25,000 கொடுக்கிறது

ஆண்டுதோறும் ரூ. 5000 வேறு

சென்னை, நவ. 26

தமிழ் கலைக் களஞ்சியம் தயாரித்துவெளியிடுவதற்காக தமிழ் வளர்ச்சிக் கழகத்துக்குமொத்தமாக ரூ. 25,000 மும் ஆண்டுதோறும் ரூ. 5000ம் இரண்டும் அளிக்க திருமலை-திருப்பதி தேவஸ்தான கமிட்டி அங்கீகரமளித்திருக்கிறது.

தெலுங்குக்கும் நன்கொடை

தெலுங்கு கலைக் களஞ்சியம் தயாரிக்க தியாகராய நகர் தெலுங்கு பாஷா சமிதிக்கு அதே அளவு தொகையை தேவஸ்தான கமிட்டி அளிக்கிறது.

சென்னை நவ. 23உ தலைவர் சர். கோபதி நாராயணஸ்வாமி செட்டியார் தலைமையில் கமிட்டிக்கூட்டம் நடந்தபோது இந்த ஸ்தாபனங்களுக்குப் பணம் அளிப்பதுபற்றி முடிவு செய்யப்பட்டது.

பிரிட்டிஷ் காமன்ஸில் இலங்கை செனட்டர்

சுதந்திர மசோதா வாசிப்பின் போது பிரசன்னம்

கொழும்பு, நவ. 27

பிரிட்டிஷ் காமன்ஸ சபையில் இலங்கை சுதந்திர மசோதா இரண்டாவது தடவையாக வாசித்து நிறைவேற்றப்பட்ட போது இலங்கை செனட் மெம்பரான திரு. ஈ. எப். என். கிராஷியன் கே. ஸி. அங்கு சமுகமாய் இருந்தார்.

நேற்று மாலை அவர் பாராளுமன்றக் கூட்டத்திற் கலந்துகொள்வதற்காக விமான மூலம் இலங்கை வந்து சேர்ந்தார்.

திரு. கிராஷியன் திரு. பிலிப் குணவர்தனாவின் பிரிவி கவுன்ஸில் மனு சம்பந்தமாக லண்டன் சென்றிருந்தவராவர்.

களவெடுத்ததாக பொய்க் குற்றச்சாட்டு

வாதிக்கு ரூ. 25 அபராதம்

மட்டக்களப்பு, நவ. 25

தாமியன் என்பவர் மீது 115 ரூபாய் களவெடுத்ததாக கந்தன், முருகன் என்பவரால் தொடரப்பட்ட வழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார். அத்துடன் பொய் வழக்குத் தொடர்ந்தமைக்காக கந்தன், முருகன் மீது ரூ. 25 அபராதம் விதிக்கப்பட்டது.

மந்திரியாருக்கு சுகயீனம்

கொழும், நவ. 27

தொழில், மீன்பிடிப் பகுதி மந்திரியாகிய திரு. ஜியார்ஜ். ஆர். டி. சில்வா நேற்று தொடக்கம் சற்றுச் சுகயீனமாய் இருக்கிறார். இதன் காரணமாக அவர் தமது அலுவல்களை சிறிதுநாட்களுக்கு செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, தட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஞு கார்த்திகை மீ 13உ
வெள்ளிக்கிழமை

ஜனநாயக தர்மம் எங்கே?

எங்கள் கவர்னர் சென்ற திங்கட்கிழமையிரவு, கொழும்பு ரேடியோவில் புதிய அந்தஸ்து சம்பந்தமாக ஒரு பிரசங்கம் செய்தார். அதுதான் தாய் இலங்கையின் கவர்னர் என்ற முறையில் தமது 'சொந்தமாக' கூறும் கடைசிச் செய்தி என்றும் தெரிவித்தார். இத்தகைய கடைசிச் செய்தியில் அவர் முக்கியமாகக் கூறியதென்ன? அடுத்த பாராளுமன்றக் கூட்டத்திற்கு முன்பே இலங்கை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சம அந்தஸ்தைப் பெற்றுவிடுமென்றார் 'இது நம்ப முடியாத அளவுக்கு நன்றாய் இருக்கிறபடியால் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்க வேண்டுமென்று சில அதமவாதிகள் கூறுகிறார்கள். அவர்கள் அப்படி நினைப்பது தவறு என்று நான் உறுதி கூறுவேன்.' என்றும் அழுத்தமாகச் சொன்னார்.

இந்நாட்டு மக்கள் சென்ற 150 வருடங்களாக பிரிட்டிஷாரால் ஆளப்படுகிறார்கள். இப்பொழுது ஏதோ பொறுப்பாட்சி கொடுப்பதாக பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் கூறியது. ஆனால் அதற்கு ஆகவேண்டிய ஒப்பந்தங்கள் யாவும் தேச மக்கள் அறியாது இரகசியத்தில் தயாரிக்கப்பட்டன. இது மக்கள் மனதில் அச்சத்தையும் அவநம்பிக்கையையும் கொடுத்தது. அச்சமும் அவநம்பிக்கையும் கொண்டவர்கள் மாற்றான் துரோகம் செய்வானென்று எண்ணுவது வழமை. அதைத்தான் மக்களின் உண்மைப் பிரதிநிதிகள் 'சுதந்திர மசோதா' சம்பந்தமாக விடுத்த அறிக்கைகளில் கூறினார்கள். அவர்களது அறிக்கைகள் அதிகாரவர்க்கத்தினருக்குப் பிடிக்கவில்லைப்போலிருக்கின்றது. ஆகவே கவர்னர் தம் திருவாயைத் திறந்து யூ. என். பியைக் காப்பாற்றஎத்தனித்திருக்கின்றார். பிரதிநிதிகளை அதமவாதிகள் என்றும் கூறினார். யூ. என். பிக் கட்சியை எவ்வளவு அவசரத்துடன் அரசாங்கத்தை ஏற்படுத்த முயன்றாரோ, அவ்வளவு ஆத்திரத்துடன் யூ. என். பியைக் காப்பாற்றவேண்டியது கவர்னர் கடமைதான்! ஆனால் பொது மக்கள் இவரது அடாத செயலைப் பலமாகக் கண்டிக்கிறார்கள் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஒரு தேசத்தின் நிர்வாகத்தை நடத்துபவர் இவ்விதம் யூ. என். பி. கட்சி சார்ந்து கருமங்கள் ஆற்றுவது முறையல்ல. கவர்னரின் இச்செயலைக் கண்டித்து மேற்று பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் எண்மரும் ஏகோபித்த ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அதை நாம் வரவேற்கிறோம். கவர்னரின் பேச்சு இந்நாட்டின் பெருந்தொகையான மக்களின் பிரதிநிதிகள் மீது முறைபற்ற அபவாதத்தைச் சுமத்துவதாகின்றது. என்பதுதான் அவர்கள் கூறுவதாகும்.

கவர்னர் பேசிய விஷயமோ வாக்குவாதத்திற்கு உரிய விஷயமாகும். அதில் அவர் தேச மக்களின் விருப்பத்திற்கு இணங்கத்தான் புதிய அந்தஸ்து வழங்கப்பட்டதென்று வேலிக்கு ஓணான் சாட்சியான முறையிலும குறிப்பிட்டிருக்கிறார். இம்மாசம் பதினான்காம் தேதி வரைக்கும் இந்நாட்டு மக்களுக்கு இப்புதிய மசோதா சம்பந்தமாக ஏதாவது தெரியுமா? இல்லை. அப்படியிருக்க தேசத்திற்கு வழிகாட்ட வேண்டியவர் முழுப் பூசனிக்காயை இலைச் சோற்றுள் மறைத்துப் பேச முற்படுவது முறையாகுமா? ஒரு அரசாங்க அதிபதியிடமிருந்து சகல மக்களுக்கும் நியாயம் வழங்கப்பட வேண்டும். அதை விட்டு அவர் ஒரு சாராருக்கு பாரபட்சம் காட்டுவது தர்மமல்ல. பொறுப்பற்றவர்கள்தான் இவ்விதம் செய்வார்கள். கவர்னர் இனியாவது தனது பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். அதுவே ஜனநாயக தர்மமாகும்.

பாலஸ்தீன பிரிவினைத்தீர்மானம்

ஐக்கிய தேச பொதுச் சபையில் நிறைவேறுமா?

யூத, அராபிய முஸதீபுகள்

நியூயார்க், நவ. 27

பாலஸ்தீன பிரிவினை தீர்மானத்திற்கு ஐக்கிய தேச பொதுச் சபையில மூன்றில் இருபங்கு வாக்குகள் ஆதரவாகக் கிடைக்குமா என்னும் சந்தேகம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. நேற்று முழுவதும் பொதுச் சபை இத்தீர்மானத்தை விவாதித்தது. மீண்டும் வெள்ளிக்கிழமை கூடி விவாதிக்கும். நேற்றையக் கூட்டத்தில் கிரீஸும் பிலிப்பைனும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்குமென்று தெரிவிக்கப்பட்டது. அராபிய நாடுகள் மீண்டும் பிரிவினையை எதிர்த்தும் யூதர்களுக்கு அமெரிக்கா ஆதரவளிப்பதைக் கண்டித்தும் பேசின. ஆகஸ்டு முதல் தேதி பிரிட்டன் பாலஸ்தீனத்திலிருந்து வெளியேறுவது நிச்சயமென்றும் பலாத்காரத்தால் பாலஸ்தீனத்தில் இரு அரசாங்கங்களை ஸதாபிப்பதற்கு உதவி செய்வது தனது கடமையில்லையென்றும் ஐக்கியதேச பொதுச் சபைத் தீர்ப்பில் தான் குறுக்கிடப் போவதில்லையென்றும் பிரிட்டன் அறிவித்தது பாலஸ்தீனம்பற்றி ரஷியா அனுஷ்டித்துள்ள கொள்கையைக் குறித்து அராபிய பிரதிநிதிகள் குழப்பமாகப் பேசினார்கள் என்றும் ஏகாதிபத்தியாதிக்கத்திலிருந்து விடுதலை பெற முயலும் அராபிய நாடுகளுக்கு ரஷியாவின் ஆதரவு எப்பொழுதும் இருக்குமென்றும் ரஷியா அறிவித்தது.

அராபிய லீகிற்கு அமெரிக்க ஆயுதங்கள்

வாஷிங்டன், நவ. 26

பாலஸ்தீன சுதந்திர அமெரிக்க லீகின் கூட்டுத் தலைவரும் நூலாசிரியருமான திரு. லூயிஸ் பிரோம் பில்டு பத்திரிகா நிருபர்கள் கூட்டத்தில் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:—

அராபிய லீகைச் சேர்ந்த 7 அராபிய நாடுகளும் பாலஸ்தீனத்தை ஆக்கிரமிப்பதாக பயமுறுத்துகின்றன. யுத்தம் முடிந்ததிலிருந்து இதுவரை அராபிய லீக் நாடுகள் அமெரிக்காவிலிருந்து 370 லட்சம் டாலர் பெறுமதியான ஆயுதங்களைத் தருவித்திருக்கின்றன அமெரிக்க சர்க்கார் பாலஸ்தீன யூதப் புரட்சிக்காரர்களுக்கு தற்பாதுகாப்பிற்காக கடனாக ஆயுதங்கள் அனுப்பி உதவ வேண்டும். ஆக்கிரமிப்பு பீதி ஒழியும்வரை மத்திய கிழக்கு அராபிய நாடுகள் மீது வர்த்தகத் தடை விதிக்கவேண்டும். டிரான்ஸ்ஜோர்டான் எல்லையில் பிரிட்டன் வைத்திருக்கும் துருப்புகள் பாலஸ்தீனத்தில் அராபியர்களுக்காக ஐந்தாம் படை வேலை செய்வதால், அத்துருப்புகளை பிரிட்டன் கலைத்து விடவேண்டும்.

அவசர நிதி

ஜெருஸலேம், நவ. 26

லெபானனிலுள்ள தனது தலைமைக்காரியாலயத்திலிருந்து ஜெருஸலேம் கிரான்ட் முப்தி விடுத்த கட்டளையின் மீது பாலஸ்தீனத்திலுள்ள அராபியத் தலைவர்கள் ஒரு அவசர நிதி திரட்டி வருகிறார்கள். பாதுகாப்பை முன்னிட்டு ஒரு லட்சத்து இருபதினாயிரம் பவுண் திரட்டுகிறார்கள். ஜெருஸலேம், ஜாபா, ஹைபா நகர்களில் ஐம்பதினாயிரம் பவுண் வசூலாகிவிட்டது.

அராபிய லீக் கூட்டம்

பாக்தாத், நவ. 26

அராபிய லீகின் 7 நாடுகளின் மன்னர்களும் தலைவர்களும் அடுத்தமாதம் பாக்தாத்திலாவது பெய்ரூத்திலாவது கூடும். ஐக்கிய தேச சபை பாலஸதீனததைப் பிரிக்கத் தீர்மானித்தால் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றியும், அது எவ்வித தீர்மானமும் செய்யாவிடில் பிரிட்டன் வெளியேறும்போது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதபற்றியும் அக் கூட்டம் ஆலோசித்து முடிவு செய்யும்.

எதிர்கால யூத அரசாங்கத் தலைவர்

நியூயார்க், நவ. 26

பிரிட்டிஷ் யூதர் ஐக்கிய சங்கத் தலைவரான டாக்டர் வீஜமன் இங்கு வந்திருப்பதால் அவருக்கு நேற்றிரவு 2000 பேர்கள் ஒரு வரவேற்பளித்தனர். அவருக்கு வயது 73. அப்பொழுது திரு.அப்ரஹாம்பின்பெர்க் பேசியபோது, டாக்டர். வீஜ்மன் பாலஸதீனத்தில் ஏற்படவிருக்கும் புதிய யூத அரசாங்கத்தின் முதலாவது தலைவராவார் என்று தெரிவித்தார். (ராய்ட்டர்)

இலங்கையின் புதிய அரசாங்கம் இந்திய துவேஷத்தை அகற்றுமா?

ஜனப் பிரதிநிதிகளின் அரசியல் நிர்ணயசபை வகுக்கும் திட்டமே இலங்கைக்கு உண்மைச் சுதந்திரம் அளிக்கும்

தமிழ் காங்கிரசின் யோசனையே சாலச்சிறந்தது

யூ. என். பி. மந்திரி சபைக்கு சென்னை பத்திரிகைகளின் புத்திமதி

சென்னை, நவ. 26

இன்று வெளியான "இந்தியன் எக்ஸ்பிரஸ்" பத்திரிகை "இலங்கையின் புதியஅந்தஸ்து" என்ற மகுடமிட்டு எழுதியுள்ள தலையங்கத்தில் பின்வருமாறு தெரிவிக்கிறது:-

இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் சுதந்திரம் வழங்கிய பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கம் இலங்கையின் சுதந்திர வேட்கையையும் பூர்த்தி செய்ய இணங்கியது இயல்பே! இலங்கை சுதந்திர மசோதாவின்படி இலங்கைக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட பூரணப் பொறுப்பாட்சி வழங்கப்படுகிறது. குடியேற்றநாட்டு மந்திரி அறிக்கையை கவனிக்குமிடத்து இந்த புதிய அந்தஸ்து இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் அளிக்கப்பட்டுள்ள அந்தஸ்தைப்போல இருக்குமா என்பதைக்குறித்து அபிப்பிராயபேதமிருந்து வருகிறது. ஆனால் அதே போன்றிருக்குமென உள்நாட்டு மந்திரி தெரிவிக்கிறார். எது எப்படி இருந்தபோதிலும் வெளிநாடுகளின் அபாயத்திலிருந்து இலங்கையைப் பாதுகாக்க இலங்கைபிரிட்டனுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தந்தான் விபரீதமாக இருக்கிறது. இந்தியா, பர்மா சம்பந்தமாக இந்நாடுகளிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் அனைத்தையும் வெளியேற்றி விடுவதென்ற ஒப்பந்தத்தின் மீது இரு நாடுகளும் சுதந்திரத்தைப் பெற்றிருக்கின்றன. இந்த இரு நாடுகளும்பிரிட்டனுக்கு ராணுவ தளம் அமைத்துக் கொள்வதற்கு இடங் கொடுக்கவில்லை. அந்நிய துருப்புகளை வைத்துக் கொள்ள இடங் கொடுப்பதால் நாட்டின் சுதந்திரத்திற்கும் பூரண அதிகாரத்திற்கும்இழுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் பிரிட்டன் சம்பந்தப்பட்ட மட்டில் இலங்கையின் நிலைமை இந்தியா பர்மா நிலைமைகளைவிட வேறுவிதமானது. இலங்கையானது பிரிட்டனுக்கும் சிங்கப்பூருக்குமுள்ள பாதையில் அமைந்திருக்கிறது. ஆதலால் பிரிட்டன் இந்தியாவிலிருந்தும் பர்மாவிலிருந்தும் வெளியேறியதுபோல இலங்கையிலிருந்து முற்றாக வெளியேற முடியாது. சென்ற யுத்தத்தில் எதிர்பாராத இடத்திலிருந்து சிங்கப்பூர் தாக்கப்பட்டதை பிரிட்டன் உணர்ந்திருக்கிறது. ஆதலால் இந்து மகா சமுத்திரத்திலுள்ள நாடுகளின் நட்பைப்பெற பிரிட்டன் முயற்சிக்க வேண்டுமேயன்றி அதிலுள்ள ஒருநாட்டில் ராணுவ தளங்களை அமைத்துக் கொள்ள முயல்வது உசிதமல்ல.

என்ற போதிலும் இந்தியாவானது இலங்கை அடையவிருக்கும் புதிய அந்தஸ்தை வரவேற்கிறது. ஆனால் இனிமேல் இந்தியாவானது இலங்கையிலுள்ள தனதுநாட்டினரது அந்தஸ்தைக் குறித்து கவனம் செலுத்த வேண்டியது இயல்பே!

இனிமேல் சட்டங்கள் இயற்றுவது சம்பந்தமாக இலங்கைக்குப் பூரண சுதந்திரமிருப்பதால் இலங்கை இந்தியர்களது நியாயமான கோரிக்கைகளுக்கு புதிய அரசாங்கம் எவ்விதம் இணங்குகிறதென்பதே இப்பொழுது கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

இதுவரையிருந்த அரசாங்கம் இந்தியர்மீது காட்டிவந்த துவேஷத்தையே புதிய அரசாங்கமும் பின்பற்றுமா? அல்லது அத்துவேஷத்தைக்கைவிட்டு,இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கும் சுபீட்சத்திற்கும் அரும்பாடுபட்ட வகுப்பினர் என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட இலங்கை இந்தியருக்கு பூரண பிரஜா உரிமைகளை வழங்குமா?

இனிமேல் இலங்கையானது இந்தியர்களிடம் நிதானபுத்தியுடன் நடந்துகொள்ள வேண்டுமென்றே எவரும் எதிர்பார்ப்பார்கள். சுதந்திரமான இந்தியா இலங்கை இந்தியர்களுக்கு பக்க பலமாகவுள்ளதென்பதையும் அதுஇலங்கை அருகேயுள்ள ஒரு பெரிய நாடென்பதையும் இலங்கை மனதிலிருத்திக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது இந்தியாவை இலங்கை இனி அலட்சியம் செய்ய முடியாது. பிரிட்டனுடன் கட்டுப்பட்டிருப்பதின் காரணமாக இந்தியாவைப் பயமுறுத்த முடியாது என்று இலங்கை கனவு காணலாகாது. ஏனெனில் இந்தியாவும் பிரிட்டனுடன் நேசபான்மையுடையனவாக இருக்கின்றன. தற்சமயம் இந்தியா இலங்கையின் பாதுகாப்புக்கு உதவிசெய்ய முடியாத நிலையிலிருந்து வருவதால் இலங்கை தற்சமயம் மற்றோர் நாட்டின் உதவியை நாடியிருப்பதை ஒரு வாறு ஒப்புக் கொள்ளலாம்.

தவிரவும் இம்மாத ஆரம்பத்தில் இலங்கை பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனநாயகா திரு எம். எஸ் ஆனேக்கு அனுப்பியுள்ள தந்தியில், "கூடிய சீக்கிரம் இலங்கை-இந்தியா பிரச்னைகள் இரு நாடுகளுக்கும் நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் இரு நாடுகளுக்கும் திருப்திகரமான முறையில் தீர்க்கப்படுமென்பதில் எனக்குக் கிஞ்சிற்றும் சந்தேகம் கிடையாது" என்று தெரிவித்திருக்கிறார். பண்டித நேருவும் இலங்கையிலுள்ள இந்தியர் நிலைமைபற்றி டிசம்பர் மாத மத்தியில் சமரஸப்பேச்சு ஆரம்பமாகுமென்று, இந்தியா பாராளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார். இந்த சமரஸப் பேச்சு வெற்றிகரமாக முடியவேண்டுமென்றே எல்லோரும் விரும்புகிறார்கள்.

பரஸபர நலன்களை முன்னிட்டு இலங்கையானது இந்தியர் மீது துவேஷம் பாராட்டுவதை நிறுத்துமென்று நம்புகிறோம்.

இலங்கையானது உண்மையான சுதந்திரமடைய வேண்டுமென்பதை உண்மையான எண்ணங்கொண்டிருக்குமாகில், அது தமிழ் காங்கிரஸ் தெரிவித்த யோசனையை ஏற்றுக் கொள்வதே நலம். இலங்கைக்கு இலங்கை மக்களால் அரசியல்திட்டத்தை வகுக்க ஒருஜனப் பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் நிர்ணயசபையை அமைக்கவேண்டுமென்றும் புதிய அரசியல் திட்டத்தில் சிறுபான்மையோருக்கு நீக்கமுடியாத உரிமைகளை அளிக்கவேண்டுமென்றும் தமிழ் காங்கிரஸ் கூறியுள்ள யோசனை மிகவும் சிறந்தது.

இவ்விதம் செய்தால் இலங்கை உண்மையான சுதந்திரத்தைப் பெறுகிறதென்று இந்தியாவும் இந்தியர்களும் கருதுவார்கள். இப்படிப்பட்ட ஏற்பாடு செய்யின் நீண்டகால சமரஸப் பேச்சுகள் நடத்தத் தேவை இருக்காது அப்பொழுது இலங்கை சுயமதிப்புடன் தானொரு சுதந்திரமான நாடென்றுதுணிந்து கூறமுடியும்.

'ஹிந்து' பத்திரிகை கருத்து

சென்னை, நவ. 26

இன்று வெளியான 'ஹிந்து' பத்திரிகை "இலங்கையின் எதிர்காலம்" என்ற மகுடமிட்டு எழுதியுள்ள தலையங்கத்தில் பின்வருமாறு தெரிவிக்கிறது:-

இலங்கையில் புதிய அரசியல் திட்டம் ஆரம்பமாவதும்,

(3-ம்பக்கம் பார்க்க)

சட்டவிரோதமாகச் சாராய விற்பனை

பெண்ணுக்கு ரூபாய் 200 அபராதம்

மட்டக்களப்பு, நவ. 26

பெரியதம்பி கண்ணம்மா என்பவர் சட்டவிரோதமாகச் சாராயம் விற்பதாக கலால் இலாகா அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்தது.

அதன்பேரில் கலால் இன்ஸ்பெக்டர் தமது காவலாளர் இருவரை மேற்படி பெண் வீட்டிற்கு அனுப்பிவைத்தார். அவர்கள் சாராயம் வாங்கிக் கொண்டு அடையாளமிடப்பட்ட ரூபாய் நோட்டைக் கொடுத்துத் திரும்பினர். பின்னர் இன்ஸ்பெக்டர் சென்று அந்த ரூபாய் நோட்டைப் பெற்றதோடு, வீட்டைச் சோதனையிட்டு சாராயப் போத்தல் ஒன்றையும் கண்டு பிடித்தார்.

விசாரணை முடிவில் எதிரிக்கு ரூபாய் 200 அபராதம் விதிக்கப்பட்டது.

மேற்படி பெண் சலவைத் தொழிலாள வகுப்பைச் சேர்ந்தவர்என்று தெரிகிறது [ந-நி]

களவு வழக்கில் எதிரி விடுதலை

மட்டக்களப்பு, நவ. 26

எம்.கதிஸ உம்மா என்பவருக்குச் சொந்தமான நகைகளையும் பணத்தையும் களவாடியதாக உதுமா லெப்பை என்பவர் மீது ஓர் வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கு சம்பந்தமாக கதிஸ உம்மா கூறிய வாக்கு மூலம் பின்வருமாறு:- இம்மாதம் 11-ம் தேதி காலை 4 மணியளவில் ஏதோ சப்தம் கேட்டதால் நான் விழித்துக் கொண்டேன். அப்போது நான் விளக்கேற்றிப் பார்க்கையில் எதிரி என் அறையில் நிற்பதை நான் கண்ணுற்றுக் கூச்சலிட்டேன். எதிரி உடனே ஓட்டம் பிடித்தார். பின்னர் கிராம விதானையால் எங்கள் வீட்டின் பின்புறத்தில் களவாடப்பட்ட பெட்டி கண்டு பிடிக்கப்பட்டது.

எதிரி சார்பில் கதிஸ உம்மாவின் மாமனார் ஆதமாவா அலியார் எதிரியின் 5 வயதுப் புத்திரியுடன் தகாத விதமாக நடந்து கொண்டதாக ஓர் வழக்கு இருப்பதாகவும் இதன் காரணமாகவே இக்களவு பதிலுக்கு ஜோடிக்கப்பட்டதென்றும் கூறப்பட்டது.

விசாரணை முடிவில் எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.(ந-நி)

கோட்லி மீட்கப்பட்டது

எதிரிகள் ஓட்டம்

புதுடில்லி, நவ. 26

31 தினங்களாக எதிரிகளால் முற்றுகையிடப்பட்டிருந்த கோட்லியிலுள்ள ஜம்மு காஷ்மீர் ராணுவக் கோட்டையை இந்திய துருப்புகள் இன்று மீட்டன.

இந்திய துருப்புகள் கோட்லியருகே செல்லவும் எதிரிகள் ஓட்டம் பிடித்தனர்.

இந்தியா பாகிஸ்தான் கூட்டு ராணுவத் தலைமைக் காரியாலயம் கலைக்கப்படுவதால் ஒரு சிறிய கூட்டு ராணுவ சபை அமைக்க இன்று கூட்டு ராணுவ சபை கூடி ஆலோசித்தது. இந்தியா மந்திரிகளிருவரும் பாகிஸ்தான் மந்திரிகளிருவருமடங்கிய சிறிய சபை அமைக்கப்படும். (அ-பிரஸ)

சுதந்திர இந்தியாவின் முதலாவது வரவு செலவுத் திட்டம்

26 கோடி 24 லட்ச ரூபாய் துண்டு விழுகிறது

ஜவுளி, நூல் ஏற்றுமதி வரி அதிகரிப்பும் மாறுதல் முறையும்

அகதிகள் கஷ்ட நிவாரணத்திற்கும் உணவுப்பொருள்களுக்கு பணஉதவி யளிக்கவும் அபரிமிதமான செலவு

புதுடில்லி, நவ. 26

சுதந்திர இந்தியாவின் முதலாவது வரவுசெலவுத் திட்டத்தை இன்று நிதி மந்திரி திரு ஆர். கே. ஷண்முகம் செட்டியார் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். ஆகஸ்ட் 15-ம் தேதியிலிருந்து 7 மாத காலத்திற்கு இத்திட்டம் தயாரிக்கப்பட்டுளளது. இவ்வரவு செலவு திட்டத்தின்படி வருமானத்தில் 26 கோடி 24 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது. திட்டததை சமர்ப்பித்து நிதி மந்திரி பேசிய போது பின்வருமாறு தெரிவித்தார்:- டாலர் பிரதேசங்களிலிருந்தும் ஸ்டெர்லிங் பிரதேசங்களிலிருந்தும் இந்தியா இறக்குமதி செய்யும் சரக்குகள் மீது இந்தியா அடுத்த தடவையாக இறக்குமதி லைசென்சுகள் வழங்கும்போது வித்தியாசம் பாராட்டவேண்டியதாக இருக்கும். இந்த வித்தியாசத்தை சமீபகாலத்திற்கு முன்புதான் நாம் நீக்கியிருந்தோம். ஆனால் நாட்டின் பொருளாதாரதின் முக்கியமான தேவைகளுக்குப் பாதகமேற்படாத முறையில் தான் இந்த வித்தியாசத்தை அனுஷ்டிக்க ஏற்பாடு செய்வோம்.

சாதாரண மக்கள் தலையில் வரிச் சுமையை ஏற்றாத நிலையில் கூடியவரை வருவாயை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது.

இப்பொழுது பருத்தி ஜவுளி மீதும் நூல் மீதும் 3 சத வீதம் ஏற்றுமதி வரி விதிக்கப்பட்டு வருவதற்குப் பதிலாக இனி ஒரு சதுர கெஜ ஜவுளிக்கு 4 அணா வீதமும் ஒரு ராத்தல் நூலுக்கு 6 அணா வீதமும் ஏற்றுமதி வரி விதிக்கப்படும்.

நாட்டின் பொருளாதார நிலைமை சரிவரவேதான் இருந்துவருகிறது. அதைப்பற்றி கவலைகொள்ளவேண்டியதேவையில்லை. ஆனால் அதற்காக நாம் வாளாவிருக்கவும் கூடாது. அரசாங்க வருமான நிலைமையும் சரிவரவேயிருக்கிறது. நமது வருவாயை மீறி நாம் வாழவில்லை. நமது பண நிலைமை மோசமான நிலைமைக்கும் வராது.

பருத்தி ஜவுளி நூல்மீது விதிக்கப்படும் புதிய ஏற்றுமதி வரியால் இந்த நிதி வருடம் ஆகஸ்ட் 15-ம்தேதியிலிருந்து மார்ச் 31-ம் தேதி முடிய 165 லட்சம் ரூபாய் கிடைக்கும் ஆனால் முழு வருடத்திற்கெனில் 8 கோடி ரூபாய் கிடைக்கும்.

நிதி மந்திரி வரவு செலவு திட்டத்தை சமர்ப்பித்து 85 நிமிட நேரம் பேசினார். அங்கத்தினர்கள் மிக்க கவனத்துடன் அவரது பிரசங்கத்தை கூர்மையாகச் செவிமடுத்துக் கேட்டார்கள். பண நிலைமை எப்படி இருந்தபோதிலும் தரதிருஷ்டம் வாய்ந்த அகதிகளின் கஷ்ட நிவாரணத்திற்காக அரசாங்கம் உதவியளிக்கப் பின்வாங்காது என்று அவர் தெரிவித்தபோது எல்லோரும் பெருமகிழ்ச்சிகொண்டு கரகோஷம் செய்தார்கள்.

வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:-

வருமானம் 171 கோடி 15 லட்சம் ரூபாய்; செலவு 197 கோடி 81 லட்ச ரூபாய். திண்டுவிழும் தொகை 26 கோடி 24 லட்சம் ரூபாய். செலவினத்தின் அம்சங்கள்:- பாதுகாப்புக்கு 92 கோடி 74 லட்ச ரூபாய் அகதிகள் கஷ்ட நிவாரணத்திற்கு 22 கோடி ரூபாய். உணவுப்பொருட்களுக்கு பணஉதவி செய்ய 22 கோடி 52 லட்ச ரூபாய். மாகாணங்களுக்கு மானியங்கள் 20 கோடி 39 லட்ச ரூபாய் மாகாணங்களுக்கு கடனுதவி 15 கோடி ரூபாய். [அ-பிரஸ]

என். எஸ். கிருஷ்ணன் மைத்துனர் கலியாணம்

பதினாயிரம் ஜனங்கள் விஜயம்

சென்னை, நவ. 24

தமிழ் நாட்டு பிரபல ஹாஸ்ய நடிகராகிய ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணனின் மைத்துனன் (ஸ்ரீ மதி. டி. ஏ. மதுரத்தின் சகோதரர்) ஸ்ரீ டி. ஏ. பாலசுப்பிரமணியத்திற்கும், ஸ்ரீ மதி எஸ். ஜே. மோகனும்பாளுக்கும் இன்று காலை பத்துமணிக்கு சென்னையில் ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன் இல்லத்தில் ஸ்ரீமான்கள் ஜீவானந்தம், எஸ். என். அண்ணாதுரை, ம. பொ. சிவஞான கிராமணியார் ஆகிய மூவர் தலைமையில் திருமணம் நடந்தேறியது. சுமார் பத்தாயிரம் ஜனங்களுக்குமேல் இந்த கலியாணத்திற்கு வந்திருந்தனர்.

ஸ்ரீ என். எஸ் கிருஷ்ணன் எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில், இந்த கலியாணம் ஒரு சீர்திருத்தக் கலியாணம் மாத்திரமல்லாமல் ஒரு கலப்பு மணமும் ஆகும் என்பதையும் குறிப்பிட்டார்.

அமெரிக்காவுக்கு பிரிட்டிஷ் பந்தயப் புரு ஏற்றுமதி

லண்டன், நவ. 26

பிரிட்டிஷ் பந்தயப் புருக்கள் ஏராளமாக அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகின்றன. ஒரு ஜோடி புருக்களுக்கு 160டாலர் வரை கிடைக்கிறது.

பாரிஸ வேலை நிறுத்த நிலைமை

10 லட்சம் தொழிலாளர் கலந்துள்ளனர்

பாரிஸ நவ. 26

பிரான்ஸில் 10 லட்சம் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்துள்ளனர். அவர்களது சம்பளத்தை உயர்த்தும் பிரச்னை சம்பந்தமாக பிரெஞ்சு மந்திரி சபை இன்று கூடுகிறது.

இது தவிர 20 லக்ஷம் அரசாங்கத் தொழிலாளர் தமது கோரிக்கைகள் சம்பந்தமாகத் தீவிர நடவடிக்கை எடுக்கப் போவதாக பயமுறுத்தியுள்ளனர்.

பாரிஸின் கலகப் பிரதேசங்களிலிருந்து சமீபத்தில் சோவியத் பிரஜைகளான சில வெள்ளை ரஷியர்கள் இன்று நாடு கடத்தப்பட்டனர்.

பின்லந்தில் இன்று நள்ளிரவு தொடக்கம் அரசாங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.(ராய்ட்டர்)

மட்டக்களப்பில் பாராளுமன்றத் திறப்பு விழா

மட்டக்களப்பு, நவ. 25

இங்குள்ள பொதுக் கட்டிடங்கள் எல்லாவற்றிலும் பாராளுமன்றத் திறப்பு விழாவை முன்னிட்டு யூனியன் ஜாக்கும் சிம்மக் கொடியும் பறக்க விடப்பட்டன.

சிங்கள வியாபார ஸ்தலங்களில் பொதுவாக சிம்மக் கொடியே பறக்க விடப்பட்டது. ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் இரு கொடிகளும் பறக்க விடப்பட்டன.

யாழ்ப்பாணத் தமிழரின் வர்த்தக நிலையங்களில் காங்கிரஸ் கொடிகள் மட்டும் பறந்து கொண்டிருந்தன. (ந-நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டங்களைப் பங்கிட்டுக் கொடுக்கும்படி மனுக்கள்

வாக்காளர்களுக்கு தேர்தல் அபேட்சகர்கள் வாக்குறுதி

யூ. என். பி. யின் ஏமாற்று வித்தை

கொழும்பு, நவ. 27

தனிப்பட்ட தோட்டங்களைப் பங்கிட்டுத் தங்களுக்கு கொடுக்கும்படி அநேக பொது ஸதாபனங்களிலிருந்தும் சங்கங்களிலிருந்தும் வாக்காளர்களிடமிருந்தும் நீலக்கமிஷனர் காரியாலயத்தில் மனுக்கள் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன. பொதுத் தேர்தலில் அநேக அபேட்சகர்கள் வாக்கு சேகரிக்கும் பொருட்டு தங்ஙமாக வாக்காளர்களுக்கு தோட்டங்களைப் பங்கிட்டுக் கொடுப்பதாக வாக்குறுதியளித்திருப்பதாகத் தெரிகிறது. பெரும்பாலும் யூ. என். பி. அபேட்சகர்களே இவ்வித வாக்குறுதி அளித்திருக்கின்றனர். அரசாங்கம் தனிப்பட்ட தோட்டங்களை விலைக்கு வாங்கி அதைப் பங்கிட்டுக் கொடுப்பதில் கிராமவாசிகளுக்கே உரிமையுண்டென்பதை நன்கு உணர்ந்து கொள்ளாது இவ்விதம் வாக்குறுதியளித்திருக்கிறார்கள் போலும். யூ. என். பி. அபேட்சகர்களின் இந்த வாக்குறுதிகளை நம்பி அவர்களுக்கு வாக்களித்த பேர்வழிகள் இப்பொழுது பெரும் ஏமாற்றமடைந்தார்கள். அவர்களுக்கு அரசாங்கம் அவ்வித வாக்குறுதி எதுவுமளிக்கவில்லையென்று தெரிவித்து நீலக்கமிஷன் அவர்கள் மனுக்களுக்குப் பதில் எழுதி விட்டார். இவ்விதம் நிலங்கோரி பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்கள் சிலரும் மனுக்கள் அனுப்பியிருக்கின்றனர்.

இவையெல்லாவற்றையும்விட வேடிக்கையென்னவெனில் ஒரு மந்திரியும் இவ்விதம் நிலங் கோரி மனுச் செய்துகொண்டிருக்கிறார். அம்மனுவில் அவர் தான் இன்ன தொகுதியின் பிரதிநிதியென்று கூட தெரிவிக்காமல் மந்திரி என்று கைச்சாத்திட்டிருக்கிறார். அம்மனுவில் மத்திய மாகாணத்தில் ஒரு டிஸ்டிரிக்ட் முழுவதிலுமுள்ள எல்லா தோட்டங்களையும் அரசாங்கம் விலைக்கு வாங்க வேண்டுமென்றும் குறிப்பாக 5000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு தோட்டத்தை விலைக்கு வாங்க வேண்டுமென்றும் கோரியிருக்கிறார்.

இவ்வித விசித்திர மனுக்கள் நீலக் கமிஷனரை திகைப்படையும்படி செய்துவிட்டன. தோட்டங்களை விலைக்கு வாங்க தனக்கு அனுமதிக்கப்பட்ட பணம் இம்மனுதார்களைத் திருப்திசெய்யக் கொஞ்சமும் போதாது. ஏற்கனவே அரசாங்கம் கைப்பற்றியுள்ள தோட்டங்களுக்கு இன்னும் 40 லட்சம் ரூபாய் கிரயம்கொடுக்க பணம் தேவையாக இருக்கிறது. ஆனால் புதிய வரவு செலவுத் திட்டக்கிலோ இந்த இனத்துக்கு 3 லட்ச ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கத்தியால் குத்த முயற்சி

மட்டக்களப்பு, நவ 26

எஸ். தங்கராஜா என்பவரைக் கத்தியால் தாக்க முயற்சித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி ஸ்ரீஸ்கந்தராஜா எதிரி பி. வேலு என்பவருக்கு 6 வாரச் சிறைத் தண்டனை விதித்தார். [ந-நி]

டிராம் கண்டக்டர் மீது லொறி மோதியது

கொழும்பு, நவ. 27

மாக்வுட்ஸ் கம்பெனியைச் சேர்ந்த லொறியொன்று நேற்று பொரளையிலிருந்து வரும் போது ஜாஹிரா கல்லூரிக்கெதிரே சென்றுகொண்டிருந்த டிராமில் மிதி பலகையில் நின்றுகொண்டிருந்த கண்டக்டர் மீது மோதி அவரைக் கீழே தள்ளியது. காயமடைந்த கண்டக்டர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ரக்வான், நவ. 24

இரத்தினபுரி, சென்ற் அலோசியஸ கல்லூரி ஆசிரியருக்கும், ரக்வான் சென்ற் அந்தோனியார் கழக ஆசிரிய, மாணவருக்குமிடையில் 24-11-47 மாலை நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் ரக்வான் ஆங்கில கலாசாலையினர் வெற்றிபெற்றனர். (ந-நி)

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

சாம்ராஜ்ய பூசாரிகளுக்கே சர்வபோக சுதந்திரம்

ஏழைப் பொது மக்களுக்கு எள்ளளவு சுதந்திரமுமில்லை

உண்மைகளை மறைப்பதற்கு ஒத்துழைக்கும் பத்திரிகைகள்

மொறட்டுவ தொகுதி பார்லிமெண்ட் அங்கத்தவரான திரு சோமவீர சந்திரசிரியின் 'நிதாஸ' என்னும் சிங்களப் பத்திரிகை நேற்று முன்தினம் எழுதியிருப்பதன் தமிழாக்கம்.

பழம் பெருமை வாய்ந்த இலங்கைக்கு சகல சம்பத்தும் பொருந்திய-பரம சுந்தர-சுதந்திரத்தை பெற்றுவிட்டதாக சேனநாயக்கா மூப்பனார் சந்தோஷமேலீட்டால் கூவும் சேவல்போன்று உரக்கக் கூவுகிறார் சிறகடித்துக் கூவுகிறார். ஒற்றைக்காலில் நின்று கூவுகிறார் என்ன குறை! வேண்டுமானால் வலையமிட்டு கொக்கரித்துப் பார்க்கட்டும்!

ஆம்! அவர் சேவல்போன்று தூங்கி விழுந்து விட்டதினால் கூவவில்லை. சந்தோஷமேலீட்டினால்தான் கூவுகிறார் அப்படியெல்லாம் என்ன பிரமாதம்? உளுத்துப்போய்க்கொண்டிருந்த குடும்ப ஆதிக்கத்திற்கு சோல்பரி அரசியல் திட்டத்தினால்-கபினெட் முறையினால்-நவசக்தி பெற்றுவிட்டதனால்தான். கஞ்சிக்கு உப்பில்லையென்று லட்சக்கணக்கான மக்கள் கதறும்பொழுது சேனநாயக்கா மூப்பனாரின் ஒரு சில குடும்பங்களுக்கு சகல சுகபோக வாழ்க்கையும் பொதுப் பணத்திலேயே பார்த்துக்கொள்ளும் சுதந்திரம் கிடைத்துவிட்டது!

சேனநாயக்கா மூப்பனாருக்கும் அவரின் கும்பலுக்கும் புதிதாக உடன்படிக்கையில் கைச்சாத்திடுமுன்பே சுதந்திரம் கிடைத்துவிட்டது. இவர்களுக்கு முன்கூட்டியே இரண்டாம் பேருக்குத் தெரியாமல் சோல்பரி சாமியார் அசரீரி கொடுத்துவிட்டார். இப்படியெல்லாம் சாமியும் பூசாரியும் 'தோள்மேல்கைபோட்டு பிணைந்திருக்கும்போது' மூட பக்தர்கள் நாவளைத்து வளைத்து அரோகரா போடவேண்டியதுதான்.

சாம்ராஜயப் பூசாரியின் ஆணையின்படி கபினெட்டை நிறுவினார். முதற் கபினெட் கூடியதும், தொந்தி கொழுக்க சதிகாரக் கும்பல்களுக்கு வேண்டியபடி சம்பளத்தை நிர்ணயித்துக்கொள்ளப்பட்டது. அதுவும் எப்படி? சேனநாயக்கா மூப்பனாருக்கும் அவரின் உறவினர்-கும்பல்களுக்கும். ஐஸ்கிறீம்சாப்பிட- சொக்லட் சாப்பிட-நடனமாட-நீந்தி விளையாட-டெனிஸ் பந்தாட்டமாட ஆயிரமாயிரமாக ஒதுக்கப்பட்டது. சேனநாயக்கா மூப்பனாருக்கு மாடமாளிகையென்ன-ராஜ பவனிக்கேற்ற மோட்டார் ரதங்களென்ன-பாதுகாப்பென்ன எவ்வித குறைவுமின்றி சகல சுக சௌகரியங்களும் செய்யப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு வேறு என்ன சுதந்திரம்தான் வேண்டும்? அதெல்லாம் பாசாங்கு! உளுத்துப்போய்க்கொண்டிருக்கும் இந்த திமிர் பிடித்த பணக்கார கும்பல்களுக்கு எம்மாதிரியான சுதந்திரம் வேண்டுமோ அது கிடைத்துவிட்டது.

உடன்படிக்கையில் கைச்சாத்திட்டபின் கிடைக்கப்போகிறதென்று சொல்லப்படும் சுதந்திரம் கிடைக்காவிடினும் கூட, சேனநாயக்காவுக்கும் அவரின் கூட்டத்தாருக்கும் இருக்கிற சுதந்திரம் தலைக்குமேல்தான். ஒருசமயம் அதற்குமேல் சுதந்திரம் கிடைக்குமாயின் அவர்கள் தரைமட்டமாய் போய்விடுவார்கள்!

எனினும் பொதுமக்கள் இங்கே கவனிக்கவேண்டிய முக்கிய விஷயமென்னவென்றால், சேனநாயக்கா மூப்பனாருக்கு 'சுதந்திரம்' கிடைத்துவிட்டதற்காக டெம்பிள்டிரீஸ்மாளிகைக்குகிரகப்பிரவேசம் செய்துவிட்டதற்காக, முப்பதினாயிரம் ரூபா செலவில் பெரிய காரில் சவாரிசெய்ய முடிந்ததற்காக, ஏழைப் பொதுமக்களுக்கு விமோசனம் கிடைத்துவிட்டதா?

இன்னும் பொது மக்களுக்கு 'பஸ் பிரயாணம் என்றால் 'போலிங்', ரொட்டித் துண்டுக்கு 'போலிங்', துணி வாங்குவதென்றால் 'போலிங்', சுருங்கச் சொல்லுமிடத்து கஞ்சிக்கு உப்பென்றால் கூட 'போலிங்' ஏழை மக்கள் அன்றாட வாழ்க்கையைக் கடத்துவதற்காக படும் பாடு பெரும் பரிதாபம்! சேனநாயக்காகும்பலுக்கு சுதந்திரம்கிடைத்துவிட்டதால், பொது மக்களுக்கு சுதந்திரம் எள்ளளவேனும் இல்லையென்று இதனால் தெளிவாகிறது.

இத்தேச மக்கள் எல்லோருக்கும் பொதுவான சுதந்திரத்தைப் பெறவேண்டுமானால், சேனநாயக்கா மூப்பனாருக்கும் அவரின் கும்பலுக்கும் கிடைத்துள்ள சுதந்திரத்தை ஒழித்துக் கட்டவேண்டியது உடனடியாகச் செய்யவேண்டிய நடவடிக்கையென்பதை நாமெல்லோரும் குறித்துக்கொள்ள வேண்டும்!

தள்ளாடிக் கொண்டிருக்கும் சுயநலக் கும்பல்களின் தோற்றத்துடன் மகாஜன துரோகி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் அசகாய தீரரின் சுருக்கு விழுந்த-குழி விழுந்த-ஓட்டிக் கொண்டிருக்கிற முகத்தில் குயூட்டிக்கிரா பவுடர் போட்டு கிரீம் பூசி மினுக்குவதற்கு பேரை-வீட்டு பத்திரிகைகள் பெரு முயற்சி எடுத்துக் கொண்டு வருகின்றன. அசகாய வீரனின் ஒவ்வொரு அடாத்தான நடவடிக்கையையும் நிர்மாண வேலையாக பிரசாரம் செய்யப்படுகின்றன. இந்தப் பத்திரிகைகளின் பிரசாரப்படி அசகாய வீரன் சர்வ சம்பூரண மகாஜன அபிமானியும் தொண்டரும் என்பதுதான். அவரின் வீட்டிலே வெளிவருகிற-அவரின் படுக்கையறையிலேயிருந்து வெளிவருகிற-அவரின் அடுக்களையிலேயிருந்து வெளி வருகிறயாவும் பொது மக்களுக்கான ஆக்கவேலைகள்தான் "டெம்பிள் டிரீஸ்" மாளிகையை அலங்கரிப்பதற்கு எத்தனை லட்சம் செலவழித்தாலும், அவரின் கார்களுக்கு எத்தனை ஆயிரம் செலவழித்தாலும், மற்றப்படி அவர் நினைப்பவற்றிற்கு ஆயிரமாயிரமாக நாஸ்தி பண்ணினாலும் மந்திரி பதவிகளை தம்முள்ளே பங்கிட்டுக் கொண்டாலும் எல்லாம் பொது மக்களுக்கான ஆக்க வேலைகள்தானென்பது அப்பத்திரிகைகளின் பிரசாரமாகும். வீட்டுக்காரியங்கள் தொடங்கி "டெம்பிள் டிரீஸ்" மாளிகை வரைக்கும் உள்ளயாவும் அரசியல் சேவைதானும்! அறிவுள்ள மக்கள் இவற்றைக் கண்டு சிரிக்கமாட்டார்களா?

சுயமரியாதைக்கு பங்கம்

பிராமண மாணவர்கள் போக்கு

100 கல்லூரி மாணவர்கள் பகிஷ்காரம்

தஞ்சை, நவ. 26

திருவையாற்றிலுள்ள தஞ்சை ஜில்லாபோர்டு நிர்வாகத்திலுள்ள அரசர் கல்லூரியிலுள்ள போர்டர்கள் (அங்கேயே சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்கள்) சுமார் 100பேர்வரையில் இன்று அங்கு சாப்பிடுவதை நிறுத்தியிருப்பதாய்த் தெரிகிறது.

இரண்டு பிராமண மாணவ போர்டர்கள் மாபெரும் பந்தியில் தனியாக உட்கார்ந்து சாப்பிடுவது தங்களை அவமதிப்பதைப்போல ஆகுமாதலால் இதைஆக்ஷேபித்து இந்தமுடிவு செய்தனராம்.

இலங்கையின் புதிய அரசாங்கம்-இந்திய துவேஷத்தை அகற்றுமா?

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

அது பூரண பொறுப்பாட்சியுள்ள புதிய அந்தஸ்தை அடையப்போவதும் கண்டு இலங்கை மக்களுக்கு ஆனந்தமும் அவைகளைப் பெற முயற்சித்த இலங்கை பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனநாயகாவுக்கும் அவருடைய யூ. என். பி கட்சியாருக்கும் திருப்தியும் ஏற்படும்.

இலங்கை பிரதமர் தெரிவித்த யோசனையின் பேரிலேயே இலங்கை சர்க்காருக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்குமிடையே ஒப்பந்தங்களேற்பட்டு கைச்சாத்திடப் பட்டனவென்று இலங்கை கவர்னர் நவம்பர் 24-ம் தேதி தனது ரேடியோ பிரசங்கத்தில் தெரிவித்தார். இலங்கை பிரதம மந்திரியும் இக்கூற்றை மறைக்காமலே, இலங்கை பிரிட்டனுடனும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடனும் கட்டுப்பட்டிருப்பது இலங்கைக்கு நலனாகுமென்று தன்னுடைய நம்பிக்கையைப் பகிரங்கமாக வெளியிட்டிருக்கிறார். தற்போதுள்ள நிலைமையில் இலங்கை பிரிட்டனுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்திருப்பதை எதிர்க்கட்சிகள் கண்டிப்பதில் ஆச்சரியமெதுவுமில்லை. இலங்கையின் அந்நிய நாட்டுக் கொள்கையில் அதன் பெரிய கூட்டாளியான பிரிட்டனின் ஆதிக்கமிருந்து வருமென்று அவர்கள் அஞ்சுகின்றனர்.

பிரிட்டனின் அந்நியநாட்டுக் காரியாலயத்தின் சூத்திரக் கயிற்றில் இலங்கை கட்டுண்டு ஆடவேண்டியிருக்குமென்றும் அதனால் இலங்கையின் சுதந்திரம் உண்மையான சுதந்திரமாக இருக்காது என்றும் அவர்கள் அஞ்சுகிறார்கள்.

சுதந்திர இந்தியாவும் பர்மாவும் இந்தோனேஷியாவும் தங்கள் பலத்தை அதிகரித்து ஆசியாவில் சக்திவாய்ந்த ஓர் கோஷ்டியாகச் சேர்ந்து வேலைகள் செய்ய ஆரம்பிக்குமாகில் அப்பொழுது இவர்கள் கூற்றுக்குப் பயனுண்டாகும். ஆனால் இப்பொழுதுள்ள நிலைமையில், இலங்கை தனது பாதுகாப்புக்கு பிரிட்டனின் உதவியை நாடியிருப்பது பொருத்தமானதே!

பிரிட்டிஷ் சாமராஜ்யமுழுவதின் பாதுகாப்புக்கு திரிகோணமலை மிகவும் முக்கியமான ராணுவ தளம்என்று 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை தெரிவித்திருக்கிறது. சென்ற யுத்தத்தில் இலங்கையின் இந்த முக்கியத்துவத்தை உணர்ந்தே தென்கிழக்கு ஆசியா ராணுவத் தலைமைக் காரியாலயம் இலங்கையில் நிறுவப்பட்டது. உலக அரசியலில் இலங்கையின் சுதந்திரத்தை நிரூபிக்க அது வெளிநாடுகளுக்கு தனது பிரதிநிதிகளை அனுப்பி வைக்கிறது. இலங்கை விரும்பினால் ஐக்கியதேச ஸ்தாபனத்தில் இலங்கையைச் சேர்க்கத்தான் உதவி செய்வதாக பிரிட்டனும் அறிவித்திருக்கிறது. உறுதியான பாராளுமன்ற ஆட்சி முறையை நிறுவுவதே இலங்கையின் முன்னேற்றத்திற்காக அது செய்யவேண்டிய முதற் கடமையாகும். சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், யூ. என். பி. கட்சியாருக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்காது பெருந் தோல்வியடைந்தனர். மொத்தம் தெரிந்தெடுக்கப்பட்ட 95 ஸ்தானங்களில் யூ. என். பி. கட்சிக்கு 42 ஸ்தானங்கள்தான் கிடைத்தன. ஆனால் எதிர்க்கட்சியில் பல கோஷ்டிகள் பிரிந்திருப்பதால் எதிர்க் கட்சி பலமின்றியிருக்கிறது. 20 சுயேச்சைவாதிகள் தவிர இடதுசாரிக் கட்சிகளில் தமிழ் காங்கிரஸ பிரதிநிதிகளும் இலங்கை இந்தியக் காங்கிரஸ பிரதிநிதிகளுமிருக்கிறார்கள் இந்த இரு கட்சிகளிலும் மொத்தம் 13 பேர்களிருக்கிறார்கள்.

இலங்கை இந்தியர்கள் குடியேற்றக் கட்டுப்பாடு முறை, வாக்குரிமை பிரச்னை இவைகளில் அதிருப்தி கொண்டிருப்பவர்கள். அவர்களது குறைகளை நீக்கினால் யூ. என். பி. கட்சியார் பிரதிநிதிகள் சபையிலுள்ள இந்திய கோஷ்டியை தங்களுக்கு ஆதரவாக ஆக்கிக் கொள்ள முடியும்.

இலங்கை- இந்தியா பிரச்னை

கிறிஸமஸ் விடுமுறையில் சமரஸப் பேச்சு

இந்தியா பிரதமரைச் சந்திக்க இலங்கை பிரதமர் டில்லி பயணம்

கொழும்பு, நவ. 27

பிரதிநிதிகள் சபை கிறிஸ்மஸ் விடுமுறைக்காக ஒத்திவைக்கப்பட்டதும் இலங்கை இந்தியா பிரச்னைகள் சம்பந்தமாக இந்தியா பிரதம மந்திரி பண்டித நேருவுடன் சமரஸப் பேச்சு நடத்த இலங்கை பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனநாயகா டில்லிக்குப் பயணமாவார், ஜனுவரி மாதம் பிரதிநிதிகள் சபை கூடுவதற்குள் திரும்பிவிடுவார். அவருடன் அவரது நிரந்தரக் காரியதரிசி திரு கே. வைத்தியநாதனும் மற்றும் ஒன்றிரண்டு மந்திரிகளும் செல்வார்கள். இலங்கையிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதி திரு வி. வி. கிரியும், அவரது காரியதரிசி திரு ஆர். டி. சாரியும் டில்லி சமரஸப் பேச்சில் கலந்துகொள்வார்கள்.

இலங்கையில் பிரிட்டிஷ் ஹை கமிஷனர் காரியாலயம்

சாம்ராஜ்ய உறவு மந்திரி காரியாலய அதிகாரி கொழும்பு விஜயம்

கொழும்பு, நவ. 27

இலங்கையில்பிரிட்டிஷ் ஹை கமிஷனர் காரியாலயத்தை நிறுவுவதற்கு ஏற்பாடுகள் செய்யும் பொருட்டு பிரிட்டிஷ் சர்க்காரின் சாம்ராஜ்ய உறவு மந்திரி காரியாலயத்தைச் சேர்ந்த அதிகாரி திரு. எச். ஏ. ட்விஸ்ட் கொழும்புக்கு வந்திருக்கிறார்.

அரிசிக்கு மேலும் ஒரு கோடி செலவாகும்

பர்மா அரிசி விலை உயர்வு

கொழும்பு, நவ. 27

இலங்கைக்கு அனுமதிக்கப்பட்ட அரிசி கோட்டாப்படி 1948 முதல் 6 மாதங்களில் இலங்கை பர்மாவிலிருந்து மட்டும் ஒன்றரை லட்சம் டன் அரிசி வாங்கும். பர்மா அரிசி விலை டன்னுக்கு 66 ரூபாய் அதிகரித்திருப்பதால் இலங்கை மேலும் ஒரு கோடி ரூபாய் அதிகம் கொடுக்க வேண்டியதாக இருக்கும்.

வீட்டு வாடகைக் கட்டுப்பாடு

பரிசீலனைசபை அங்கத்தினர்கள்

கொழும்பு, நவ. 27

சுகாதார ஸ்தல ஸ்தாபன மந்திரி வீட்டு வாடகைக் கட்டுப்பாடு பரிசீலனை சபைக்கு மாஜி கல்வி மந்திரி திரு. சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கராவை தலைவராகவும், கொழும்பு வீட்டு வாடகை மதிப்பிடும் சபைக் காரியதரிசியான திரு. ஜே. ஏ. வி. டி, சில்வாவை காரியதரிசியாகவும், திரு. ஏ. எல். ஜேக்ருஸ் ட்ப்ரோ, திரு. ஏ. பி. கூரே ஆகியோரை அங்கத்தினர்களாக நியமிக்கும்படி கவர்னருக்கு சிபார்சு செய்திருக்கிறார்.

செனட்டர் ஜான்ஸ

கல்வி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசி

கொழும்பு, நவ 27

தேக அசௌக்கியத்தை முன்னிட்டு செனட்டர் பதவியை ராஜினாமா செய்த திரு வி. ஆர். ஷொக்மனுக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட செனட்டர் எல். ஈ. ஜான்ஸ் கல்வி மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இலங்கையின் எதிர்கால போக்கை அமைக்க பூரண பொறுப்பாட்சியுள்ள இலங்கை முதல் சில வருடங்கள் மிகவும் பிரயத்தனங்கள் செய்தாகவேண்டும். ஆதலால் புதிய அரசாங்கம் விட்டுக்கொடுத்து சமரஸத்தை உண்டுபண்ணும் மன்ப்பான்மையுடனும் நிதான புத்தியுடனும் நடந்துகொள்ளுமென்றும் நம்புகிறோம்.

சிலோன் சீட்டுக்கம்பெனி லிமிடெட்.,

இலங்கையிற் சட்டப்படி இணைக்கப்பட்டது.

188, குமாரவீதி புறக்கோட்டை, கொழும்பு. 11

வியாபாரிகளின் சௌகரியங்களுக்காகவும் பொது ஜனங்களின் சௌகரியங்களுக்காகவும் பணத்தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தகுந்த முறையில் எங்கள் கம்பேனியில் போதுமான வசதிகள் செய்வதற்கு தயாராக இருக்கிறோம்.

விபரங்கள் நேரிலோ தபால் மூலமோ பெறலாம்.

அரு. மெ. மெய்யப்ப செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்.

துயரம் கொண்டு துன்புறுதீர்கள்

வைத்தியர்களால் கைவிடப்பட்ட எமக்கு முதல் தடவை பாவித்த மட்டில் திருப்தியான சுகம் கொடுத்தது.

சிர நேத்திராஞ்சனத் தைலம்

வ. கந்தையா, C. G. R. கம்பனி சொல்வதாவது:

சிர ரோகத்தின் கஷ்டத்தால் கண்ணிலும் உபாதை ஏற்பட்டு பலவித வைத்தியங்கள் செய்தும் சுகம் பெறாது, கடைசித்தடவையாக M. K. ஜெகநாதன் கண்வைத்தியரிடமிருந்து, சிர நேத்ரோஞ்சன தைலத்தை எடுப்பித்து பாவித்தமட்டில் எனது தலையிடி முதலிய வருத்தங்கள் நீங்கியதுடன் கண்ணுக்கும் பூரணகுணத்தைப்பெற்றேன். இத்தைலத்தின் அபூர்வகுணத்தின் நிறமைக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இயனாது பேப்பர் மூலமாக இதை யாவற்றும் பிரசித்தப் படுத்துகிறேன்.

ஒப்பம்
வ. கந்தையா C. G. R. கம்பனி.

சிர நேத்திராஞ்சனத் தைலம்

கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர் வடிதல் முதலிய பீனிச வகைகளையும், கபால இடி, தலைவலி, மயக்கம், இருமல், இளைப்பு, நரம்புத் தளர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவிர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அம்மா, காசம், நீரழிவுக்கும் ஓரளவு சுகங்கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடிதமூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.

விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாய் எழுதுக.

2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25

4 அவுன்ஸ் சீசா ரூ. 5-50

முத்தமிழறிவுப் போட்டி நிர். 4

பரிசு ரூபாய் 600-00

1-ம் பரிசு ரூபாய்	300-00	1-ம் போனஸ் பரிசு ரூபாய்	25-00
2-ம் ,,	200-00	2-ம் ,,	15-00
விசேஷபரிசு ,,	50-00	3-ம் ,,	10-00

முடிவு தேதி 17-12-47

பிரவேசக் கட்டணம் கூப்பன் 1-க்கு சதம் 50. ரூபாய் 1-00 க்கு 3 கூப்பன்கள்.

விசேஷ பரிசு:- எமதுகாரியாலயத்திற்கு முதல் முதலாக சரியானவிடை அனுப்புபவருக்கு ஒரு 'மென்ட் மோர்' பவுண்டன் பேனாவும், முதற் பரிசிற்கு உரித்தாகும் அனைவருக்கும் ஒவ்வொரு பவுண்டன் பேனாவும் பரிசளிக்கப்படும்.

முதற் பரிசு பெறும் அனைவருக்கும் தந்தி மூலம் தெரிவிக்கப்படும்

1	வே	த	னை
2	ப		ம்
3		ரு	மை
4	அ		தி
5		ன	ம்
6	ம		ம்
7		ம்	பு
8	ச	ந்	
9	து		வு

குறிப்புகளும், விடைகளும்

1 சூதும்வாதும்--செய்யும்(வேதனை)
2 இதுகாட்டியே சிலர் தம்காரியங்களை சாதிக்கின்றனர்(பணம்,பயம்)
3 சிலர் தம் குழந்தைகளை இதாக வளர்ப்பார்கள்.(அருமை,பெருமை)
4 இவன் எங்கும் தனியே சுற்றித் திரிவான். (அகதி, அதிதி, அனாதி)
5 --இல்லாதவனிடம் தர்மத்தை எதிர்பார்க்கமுடியாது (மனம்,தனம்)
6 இதில் பலவகையுண்டு (மதம்,மரம்)
7 பாண்டவர்கள் யுத்தத்தில் இதையுமோர் ஆயுதமாகப் பாவித்தனர். (அம்பு, சம்பு, பாம்பு)
8 இங்கும் ஜனநடமாட்டமிருக்கும். (சந்தி, சந்து)
9 --கொண்டவர்கள் எதற்கும் கவலைப்பட மாட்டார்கள் (துணிவு, துறவு)

கூப்பன்கள் தனிக்காகிதத்தில் எழுதியும் அனுப்பலாம். ஏஜன்ஸி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்ஸி தேவை. கூப்பன்களுக்கும், நிபந்தனைகளுக்கும்எழுதுங்கள். இலவசமாய் அனுப்பப்படும். விடையும், பரிசு ஜாபிதாவும் 23-12-47ல் அனைவருக்கும் அனுப்பப்படும்.

முத்தமிழறிவுப் போட்டிநிலையம்,
உடஹந்தன்னை.
MUTHAMILARIVU POTTI NILAYAM. UDAHENTENNA.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை அடக்குவது மந்திரி சபையின் கொள்கையா?

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வின் போது யாழ்ப்பாணத் தமிழ் மக்களை திரு சேனநாயக்கா தமது அபேட்சகரைக் கொண்டு அடிமைகளாக்கப் பார்த்தார். ஆனால் அவர்கள் பனைமரம் போன்று உறுதியாக இடங்கொடுக்க வில்லை. பின்பு திரு செல்வநாயகம் இன்றைய இலவச கல்வி முறையைக் கண்டித்தார்.

நேற்று நான் பாராளுமன்றத்திற்கு வந்தபோது அரசாங்கக் கட்சியினர் ஆட்சியை எவ்விதம் நடாத்துவார்கள் என்பதை கேட்டுக்கொள்ள முடியுமென்று நான் நினைத்தேன். இவ் விஷயத்தில் பிரதம மந்திரி தமது மந்திரி சகாக்களிலும் பார்க்க கௌரவத்துடனும் கண்ணியத்துடனும் நடந்து கொண்டார். ஆனால் ஒரு தமிழ் மந்திரியின் பேச்சு முறையற்ற முறையிலேயே இருந்தது.

இன்று பிரதமமந்திரி பொது மக்களை அடக்கி ஒடுக்குவதற்கு வழிவகைகள் செய்கின்றார். இதே போன்று சென்ற தேர்தலில் சிறுபான்மையராகிய தமிழரை அடக்கி ஒடுக்கப் பார்த்தார். ஆனால் ஒவ்வொரு யூ. என். பி. அபேட்சகரும் யாழ்ப்பாணத்தில் தோற்கடிக்கப்பட்டனர். அப்படியிருந்தும் திரு சேனநாயக்கா தமிழரின் பிரதிநிதிகளை அங்கீகரிக்க மறுத்து விட்டார். இதுவா ஜனநாயகம்? இதுவா சுதந்திரம்? மக்கள் விருப்பத்திற்கு எதிர்மாறான விஷயங்களைச் செய்யும் அரசாங்கமும் ஒரு அரசாங்கமா?

"இலவசக் கல்வி என்பது சம்பளமின்றிப் படிக்க வசதி ஏற்படுத்துவது மட்டுமல்ல வறிய பிள்ளைகளுக்கு உணவு உடை முதலியனவும் அரசாங்கத்தால் வழங்கப்படக்கூடிய வசதிகள் இருக்க வேண்டும். அல்லாதபோனால் வறியபிள்ளைகள் படிக்க முடியாது. இலவசக் கல்வியாலும் பயனில்லை. ஒரு அரசாங்கத்தின் நோக்கம் எல்லாரையும் சரிசமமாக நடத்துவதாக இருக்க வேண்டும். ஒரு பகுதியினரை அடக்குவதாக இருப்பதல்ல.

இதன் பின்னர் அவர் தமது திருத்த பிரேரணையை சபையில் கொண்டுவந்தார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

1. நாணய செலாவணி பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவும் உயர்ந்த வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் வேண்டும்.

2. கள்ள மார்க்கெட்டை ஒழித்தும் தேச நிர்வாகத்திலும் பொது வாழ்க்கையிலும் லஞ்சத்தையும் ஊழல்களையும் இல்லாமலும் செய்ய வேண்டும்.

3. பொது மக்களுக்கு போதிய வீடுகள் அமைக்குந் திட்டங்களுக்குஊக்கமளிப்பதுடன் வீட்டுவாடகைகளைக் குறைக்கவும் வேண்டும்.

4. வேலையில்லாதவர்களுக்கு தகுதியான வேலைகள் தேடிக் கொடுக்க வேண்டும் அல்லது அவர்களுக்கு அரசாங்கம் பண உதவி அளிக்க வேண்டும். சட்டப்படி மிகக் குறைந்த சம்பளத்திட்டம் போதியதாக இருக்கவேண்டும். சமூகப் பாதுகாப்புக்கு சுருக்கமான ஒரு திட்டம் கொண்ட சட்டத்தை ஆக்கவேண்டும்.

5. பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தையும், போலிஸ அதிகாரச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தையும் உடனே வாபஸ பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். பொது அரசாங்க ஊழியருக்கும் மற்றும் மக்களுக்கும் முழு தொழிற்சங்க உரிமைகளும் வழங்கப்படுதல் வேண்டும். சமீப வேலைநிறுத்தத்தின் காரணமாக வேலைகளிலிருந்து விலக்கப்பட்ட தொழிலாளர், உத்தியோகஸதர்கள் முதலியோரை உடனே வேலைக்கு எடுத்துக்கொள்வதுடன் வேறுவிதமாக தடுக்கப்பட்டவர்களின் சகல உரிமைகளும் வழங்கப்படவும் வேண்டும்.

6. கைத்தொழில், விவசாய அபிவிருத்திகளுக்குப் போதிய நிலையான திட்டங்களை வகுத்துக்கொள்ளவேண்டும்.

7. பாடுபட்டு உழைத்து வாழும் ஏழைகளுக்கு காணிகள் வழங்கப்படுவதுடன் அவர்களுக்கு உதவியும் புரியவேண்டும்.

8. தேசிய மயமாக்குவதற்கு முதற்படியாக இப்பொழுது பஸ் போக்குவரத்தை தேசிய மயமாக்கவேண்டும்.

9 இலவசக் கல்வியின் நலன்கள் தோட்டப் பகுதிகளிலுள்ளவர்களுக்கும் மற்றும் பகுதிகளுக்கும் கிடைக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

10. தேசத்தின் இப்பொழுதைய அரசியல் திட்டத்தில் ஜனநாயக ரீதியற்ற விஷயங்களை நீக்குவதற்கு தீர்மானங்களைக் கொண்டுவர சபையில் இடமளிக்கப்படவேண்டும்.

திரு டப்ளியூ. விக்கிரமசிங்கா இந்த இருத்த தீர்மானத்தை அனுவதித்துப் பேசுகையில், வர்த்தக மந்திரி தமக்கு தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களை தெரிந்துகொள்ளவேண்டுமென்றும் தேவையற்றவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டியதில்லையென்றும் குறிப்பிட்டார். இவர் தொடர்ந்து பேசியதாவது:—

இலவசக் கல்வி கூடியளவு திறமையான வழியில் நடத்தப்படவேண்டும். கடந்த இரு வருடங்களாக இலவசக் கல்வியை இங்கு அமுல் நடத்தி வருகிறோம். ஆனால் 50வருடங்களுக்கு முன்னிருந்த அதே முறைதான் இன்றும் இருக்கிறது.

இங்கு பொது மக்களுக்கு அரசாங்கம் கொடுத்திருக்கும் நிலங்கள் விவசாயத்துக்கு உதவமாட்டா. வெறும் கற்கள் நிறைந்த வறண்ட நிலங்கள் பொது மக்களிடம் கொடுக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்குப் போதிய உரம் வழங்கப்படுவதில்லை. யுத்தகாலத்தில் நிலச்சுவான்தார்களுக்கு எல்லாவித வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. காணி இல்லாதவர்களுக்கு காணி பெற்றுக் கொடுக்க பலகாலமாக நான் முயன்று வந்துள்ளேன்.

தேசியமயமாக்குதல் முதல் வேலை

அரசாங்கத்தின் தேசியமயமாக்குந் திட்டத்தின்படி முதன்முதலில் பஸ் போக்குவரத்துகள் எல்லாவற்றையும் தேசியமயமாக்கவேண்டும். கைத்தொழில்களையும் தேசியமயமாக்க வேண்டும். இப்பொழுதுள்ள அரசாங்கம் தனது கொள்கையைப்பற்றி திட்டமாகப் பொது மக்களுக்கு இன்னும் வெளியிடவில்லை.

எதிர்க்கட்சி நம்பிக்கை

"தேசத்தின் மக்கள் நலத்துக்கும் தேச மக்கள் முன்னேற்றத்துக்கும் முன்னேற்றக் கொள்கையையுடைய ஒரு அரசாங்கத்தை திட்டமான முறைப்படி நிறுவச் செய்வதற்கு இந்த திருத்த தீர்மானங்களினால் முடியுமென எதிர்க்கட்சி நம்புகின்றது."

இதன் பின் சபாநாயகர் திருத்த தீர்மானங்களைச் சபைக்கு வாசித்துக் காட்டியதுடன் இத் திருத்த தீர்மானங்களின் மீது விவாதம் நடத்தலாமென்றும் சபையில் தெரிவித்தார்.

திரு டட்லி சேனநாயக்கா, இத்திருத்தத் தீர்மானங்கள்பற்றிப் பேசுகையில் வட்டுக்கோட்டையில் தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்பட்ட ஒரு வரவேற்புபற்றியும் அந்த வரவேற்புக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் பேசியவை இன்னின்ன விஷயங்கள் என்றும் குறிப்பிட்டார். இலங்கைக்கு சோல்பரி கமிஷன் சுதந்திரம் வழங்க விரும்பியபோது இந்திய காங்கிரஸ் அதனை எதிர்த்து ஆட்சேபித்தது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நேரத்தில் திரு ஜே. ஆர். மோத்தா இடையிட்டு, திரு டட்லி சேனநாயக்காகுறிப்பிட்டு விஷயம் பிழையானதென்று கூறினார்.

சோல்பரி கமிஷன் முன் இலங்கை இந்திய காங்கிரஸும், இந்தியர் சங்கமும் அளித்த சாட்சியத்தில் கூறப்பட்டுள்ளதையே தாம் குறிப்பிட்டுள்ளதாக திரு டட்லி சேனநாயக்கா கூறிவிட்டு இந்நாட்டுக்கு கட்டுப்பாடின்றி குடியேற்றத்துக்கு இடமளிக்கப்படாதென கமியூனிஸடுகள் கூறுகின்றனர் என்றும் வெள்ளவத்தை-கல்கிசை தொகுதி அங்கத்தவர் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்தப்படாதென்று கூறுகின்றார் என்றும் இலங்கைக்கு இப்பொழுது கிடைத்த சுதந்திரம் உண்மைச் சுதந்திர மல்லவென்று இடதுசாரிகள் சிலர் கூறுகின்றனர் என்றும் இப்பொழுது கிடைத்துள்ளது உண்மை சுதந்திரந்தானென்றும் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை பிரதிநிதித்துவம் பெறமுடியுமென்றும் கூறினார்.

திரு ஆர் பெரேரா பேசுகையில் பாராளுமன்றத்திலுள்ள எல்லா இடதுசாரிகளும் மற்றும் முன்னேற்ற கட்சியினரும் ஒன்று சேர்ந்து தேசத்திலுள்ள மக்களுக்கு நீதிவழங்கவேண்டுமென்பதற்காகவே யூ. என். பி. யை ஒரேமுகமாகத் தாக்குகின்றனர் என்றும் இப்பொழுதுள்ள அரசாங்கத்தின் கொள்கை பொது மக்களை நசுக்க வகுக்கப்பட்டதேயென்றும் தேசத்தின் நீதி அனுவசியமான விஷயங்களில் செலவிடப்படுகிறதென்றும் இதெல்லாம் பிரிட்டிஷாரால் செய்யப்பட்ட தகிடுதத்தங்களேயென்றும் அந்நிய ஆதிக்க நாடுகள் எவையாயிருந்தாலும் சரி அவைகளுக்கு தாங்கள் கொடுக்கும் எந்தத் தீர்மானத்தையும் தாங்கள் எதிர்ப்பதாகவும் இலங்கை சுதந்திர நாடாகவும் அங்கு தேசிய மக்களைக்கொண்ட இராணுவமே இருக்கவேண்டுமென்றும தேச பாதுகாப்புக்கு வெளிநாட்டு ஆதிக்கத்தினரை விடப்படாதென்றும் கூறினார்.

திரு. ஈ. எல். என் கிரேஷியன் பேசுகையில் இத் திருத்த தீர்மானத்தை தாம் ஏற்க முடியாதென்றும் எல்லோரும் ஒன்று கூடி தேசத்திற்கு சேவை புரியலாமென்றும் லஞ்சம், ஊழல்கள், கள்ள மார்க்கெட் நடவடிக்கைகள் பற்றிய திருத்தங்களை தாம் ஏற்பதாகவும் கவர்னரது பிரசங்கத்தில் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் இவற்றை அரசாங்கம் கொண்டுவராது விட்டால் அதற்கு அரசாங்கமே பொறுப்பாக இருக்குமென்றும் கூறினார்.

தேச பாஷையில் பேச அனுமதியில்லை

திரு. ஐ. கே. எம். இரியகொலை, தமக்கு சிங்களத்தில் பேச அனுமதியளிக்கும்படி சபாநாயகரைக் கேட்டபோது, சபாநாயகர் சிங்களத்தில் பேசப்படும் விஷயங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கூற உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட வில்லையென்றும் நியமிக்கப்படும் வரையும் ஆங்கிலத்திலேயே பேசப்பட வேண்டுமென்றும் கூறினார். அவர் ஆங்கிலத்தில் பேசுகையில் பிரிட்டன் மேற்கொண்டு இலங்கையை ஆட்சிசெய்ய முடியாமை காரணமாகவே இலங்கைக்குச் சுதந்திரம் கொடுத்ததாகவும் கள்ள மார்க்கெட்டுக்காரர்கள் நடந்து கொள்ளும் முறைகள் பற்றியும், அரசாங்க சேவையிலீடுபட்டிருக்கும் சிப்பந்திகளை அதிகாரிகள் நடத்தும முறைகள் பற்றியும் கூறி இவற்றை நன்கு விசாரணை செய்து நிலைமையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்றும் கூறினார்.

மேஜர் ஜே. டப்ளியூ. ஒல்ட்பீல்ட் பேசுகையில் ரப்பர், தேயிலை சம்பந்தமானவிபரங்களைக் கூறிப்பிட்டு வீட்டு தேசத்தில் விவசாய அபிவிருத்திவேலைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் கூறினார். தொடர்ந்து பேசுகையில் கவர்னரது பிரசங்கத்தில் இருந்த சில விஷயங்கள் பற்றி குறிப்பிட்டு பேசியதுடன் தகுந்த வைத்திய அதிகாரிகள் போதிய அளவு இல்லாத இந் நேரத்தில் இலங்கையில் இனிமேல் ஆஸ்பத்திரிகள் கட்டப்படாதென்றும் இப் பொழுதைய அரசியல் திட்டம் வெற்றிகரமாக நடைபெற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கூறினார்.

பெரும் பிரச்னை

திரு ட்ப்ளியூ. தஹநாயகா பேசுகையில் கூறியதாவது:-

இன்று தேசத்திலேயுள்ள பெரும் பிரச்னை வேலையில்லாப் பிரச்னையேயாகும். இத்தேசத்தில் பெருந்தொகையானவர்கள் வேலையின்றி திண்டாடுகின்றனர். இத் தேசத்தில் இன்று வேலை தேடிக் கொடுக்கும் மத்திய ஸதாபனங்கள் பத்துதான் இருக்கின்றன. இது போதாது. தேசத்தில் இன்று வேலையின்றியிருப்போர் சுமார் ஒன்றரை லட்சம் பேர்களுக்கு மேலிருக்கும். பஸ போக்குவரத்தை தேசிய மயமாக்குதல் அவசியம்.

இந்நேரத்தில் இரவு எட்டு மணியானதால் இரவு போஜனத்துக்காக சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

இரவு போஜனத்தின் பின் சபை ஆரம்பித்த போது திரு தஹநாயகா தொடர்ந்து பேசினார்.

அரசாங்க பண உதவி

இன்று வேலையில்லாது கஷ்டப்படுபவர்களுக்கு அரசாங்கம் வேலை தேடிக் கொடுக்க வேண்டும். வேலை கிடைக்கும் வரையும் அவர்களுக்கு நிதி உதவப்பட வேண்டும்.

நான் முந்திய அரசாங்க சபையில் எடுப்பதற்கு முன்னறிக்கை கொடுத்த ஒரு தீர்மானத்தில் இதே விஷயத்தை தெரிவித்துள்ளேன்.

இன்று வீட்டுக் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. தேசத்திலுள்ள வீட்டு நிலைமைகளைப் பற்றிய தகவல்களை அரசாங்கம் நன்கு விசாரித்து அறிய வேண்டும்.

இத்தேசத்தின் வைத்திய சுகாதார முறைகள் திருத்தியமைக்கப்படுவதுடன் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவும் வேண்டும். தேசத்தின் பல பகுதிகளிலும் உள்ள பெரிய கட்டிடங்களை எடுத்து அவற்றை ஆஸபத்திரிகளாக மாற்றவேண்டும். பாராளுமன்ற அங்கத்தினர்களுக்கான இல்லமும் சபாநாயகரது இல்லமும் கூட இதற்காக எடுக்கப்படலாம்.

திரு எச் சேர்த்திரத்தினா பேசுகையில் நல்ல வீடுகள் மக்களுக்குக் கிடைக்கத்தக்கதாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் காணியில்லாதவர்களுக்கு காணிகள் வழங்கப்படவேண்டுமென்றும் மின்சார விளக்கு வெளிச்சம் விநியோகிக்கப்படவேண்டுமென்றும் வைத்திய வசதிகள் அளிக்கப்படவேண்டுமென்றும் கூறினார்

தொடர்ந்து பேசுகையில் பஸ் போக்குவரத்து-காணிகள் முதலியவற்றை தேசிய மயமாக்கும் திட்டத்தை தாம் எதிர்ப்பதாகவும் தொழிலாளர் தம் பொறுப்பை உணர்ந்து நடக்கச் செய்யவேண்டுமென்றும் தீமைகளை ஒழிப்பதில் எதிர்க்கட்சியினர் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டுமென்றும் சமீப தேர்தலில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் யூ. என். பிக்கு எதிராக வேலைசெய்தனரென்றும் அவர்களை கட்டுப்படுத்தவேண்டுமென்றும் கூறினார்.

கமிஷன் வேண்டும்

திரு வில்மட் பெரேரா பேசுகையில் தேர்தலில் கையாளப்பட்ட ஒழுங்கீனமான விஷயங்களைப்பற்றி விசாரணை நடத்த ஒரு கமிஷன் நியமிக்கவேண்டுமென்றும விவசாய மந்திரி மக்கள் குடியேற்றத்துக்கு எடுக்கும் காணிகளை எடுத்து விரைவில் வேலைகளைச் செய்யின் அதிகமானவர்களுக்கு வேலை கிடைக்குமென்றும் கூறினார்.

புத்தள தொகுதி ஜனாப் எஸ். எச். இஸ்மாயில் பேசுகையில் அரசாங்கம் தனது வேலைகளைச் சரியான முறைப்படி செய்ய இன்னும் சிறிது காலம் செல்லுமென்றும் கூறினார்.

திரு எம். எஸ். காரியப்பா பேசுகையில் சபாநாயகர் தலையிட்டு நேரம் 10 மணியாகிவிட்டதென்று தெரிவித்தார். மத்திய மாகாணத்தில் 5000 ஏக்கர் நிலமுள்ள ஒரு தோட்டத்தை அரசாங்கம் எடுக்கப்போவதாக பத்திரிகை ஒன்றில்வெளியான செய்திபற்றி திரு ஜே. ஏ. மாட்டென்ஸ விவசாய மந்திரியைக் கேட்டபோது இன்று பதிலளிப்பதாக அவர் தெரிவித்தார் இத்துடன் சபை நடவடிக்கைகள் இன்று காலை 10 மணிவரைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் ஞு நவம்பர் மீ 28உ இந்த பத்திரிகை 194A. தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

அரசாங்க பணமோசடி கண்டுபிடிக்கப்பட்டது

கொழும்பு நவ. 28

அரசாங்க இலாகாக்களுக்குக்கு உபயோகிக்க வாங்கப்பட்ட தகர வாளிகள் சம்பந்தமாக அரசாங்க பணம் பல ஆயிரக்கணக்கில் மோசடி செய்யப்பட்டிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் இது சம்பந்தமாக பொக்கிஷ இலாகா விசாரணை செய்து வருவதாகவும் தெரிகிறது.

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம்.எஸ். சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது!

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்,

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

"இழந்த உறுதி"

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்

புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

பிடிச் சக்கரவர்த்தி.

த.பி. செரக்கலால் ராம்சேட் பீடி

2 பீடிரிங்லேயில்

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது

இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லொசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும், இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து பாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,

71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.

Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
Z. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org